விலை: 30.00 Viber : 076 636 3378
பக்கங்கள் : பதினாறு

# வலம்புரி
## Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

கல்யாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005
இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
Email:Kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக்கட்டணம்
1000/= + 300/= மட்டுமே

சங்கு 21 வள்ளுவர் ஆண்டு 2051 சித்திரை 10 வியாழக்கிழமை (23.04.2020) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 126

### கொழும்பில் அபாய வலயமாக அறிவிக்கப்பட்ட பகுதியிலிருந்து

# யாழ்ப்பாணத்துக்கு பாரவூர்தி மூலம்

# 8 பேர் தப்பித்து வந்துள்ளனர்



## குறித்த நபர்களால் கொரோனா பரவும் அபாயம்
## யாழ் மாவட்ட அரச அதிபர் மகேசன் எச்சரிக்கை

(யாழ்ப்பாணம்)
கொழும்பில் கொரோனா அபாய வலயமாக அறிவிக்கப்பட்ட பகுதியிலிருந்து யாழ்ப்பாணத்துக்கு பாரவூர்தி மூலம் 8 பேர் தப்பித்து வந்துள்ளனர். குறித்த நபர்களால் யாழ் மாவட்டத்திற்கு கொரோனா வைரஸ் பரவும் அபாயம் ஏற்பட்டுள்ளதாக யாழ். மாவட்ட அரச அதிபர் மகேசன் எச்சரிக்கை விடுத்துள்ளார். (15ஆம் பக்கம் பார்க்க)

## நேற்று 20 பேருக்கு கொரோனா தொற்று
### பாதிக்கப்பட்டோர் எண்ணிக்கை 330 ஆக அதிகரிப்பு

(கொழும்பு)
நாட்டில் கொரோனா தொற்றுக்குள்ளானோரின் எண்ணிக்கை 330 ஆக அதிகரித்துள்ளது. மட்டக்களப்பிலுள்ள தனிமைப்படுத்தல் நிலையம் மற்றும் பொலன் 15

### யாழ் மாவட்டத்தில் தங்கியுள்ள
## வெளிமாவட்டத்தை சேர்ந்தவர்களுக்கான போக்குவரத்து ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளது
### மாவட்ட அரச அதிபர் க.மகேசன் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)
வெளிமாவட்டத்தில் இருந்து யாழ் மாவட்டத்திற்கு வந்து தங்கியிருப்பவர்கள் செல்வதற்கான போக்குவரத்து ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாக யாழ்.மாவட்ட அரச அதிபர் க.மகேசன் தெரிவித்துள்ளார். வலம்புரிக்கு வழங்கிய பிரத்தியேக செய்தியிலேயே 15

## சிகை அலங்காரம் செய்த நபருக்கும் கொரோனா

(கொழும்பு)
கொழும்பு கெசல்வத்தை பண்டாரநாயக்க மாவத்தையில் சிகை அலங்காரம் செய்த நபர் ஒருவருக்கு கொரோனா வைரஸ் இருப்பது உறுதி செய்யப்பட்டுள்ளதாக சுகாதார சேவை 15

### மறவன்புலவில் மினி சூறாவளி
## வீடுகள், ஆலயங்கள் சேதம்



15

## வேகக்கட்டுப்பாட்டையிழந்த மோ.சைக்கிள் கிளிநொச்சியில் விபத்து
### குடும்பஸ்தர் ஸ்தலத்திலேயே உயிரிழப்பு

(கிளிநொச்சி)
வேகக் கட்டுப்பாட்டையிழந்த மோட்டார் சைக்கிள், வேலி கம்பித் தூணுடன் மோதியதில் குடும்பஸ்தர் ஒருவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார்.
இச் சம்பவம் கிளிநொச்சி வின்சன் வீதி 3ஆம் கட்டை 15



## கொரோனா கட்டுப்பட்டுள்ளது
### சுகாதார அமைச்சு

(கொழும்பு)
கொரோனா நோய்த் தொற்றுப் பரவுகை கட்டுப்படுத்தப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சர் பவித்ரா வன்னியாரச்சி தெரிவித்துள்ளார். 15

### ஆயிரத்து 200க்கும் மேற்பட்டவர்கள்
## வடக்கில் தனிமைப்படுத்தலுக்காக கொழும்பிலிருந்து அழைத்து வரப்பட்டுள்ளனர்

(யாழ்ப்பாணம்)
கொரோனா வைரஸ் தொற்று வீரியமடைந்து வருவதால் கொழும்பில் அடையாளப்படுத்தப்பட்ட அபாய வலயங்களில் இருந்து தனிமைப்படுத்தலுக்காக ஆயிரத்து 200 பேருக்கு மேற்பட்டோர் வடக்கு மாகாணத்துக்கு இராணுவத்தினரால் அழைத்துவரப்பட்டுள்ளனர்.
கொழும்பு பண்டாரநாயக்க மாவத்தை, மருதானை பகுதிகளை சேர்ந்தவர்கள் மற்றும் யாசகர்கள் உட்பட வெளிநாட்டில் இருந்து நாடு திரும்பிய 15

## அரசியலமைப்பு பேரவை இன்று கூடுகின்றது

(கொழும்பு)
அரசியலமைப்பு பேரவை இன்று வியாழக்கிழமை கூடுகின்றது. முன்னாள் சபாநாயகர் கரு ஜயசூரியவின் தலை 15

### சமூகத் தொற்று இல்லையென யாரும் கூறிவிட முடியாது
## 6 இலட்சம் பேர் வசிக்கும் யாழ்ப்பாணத்தில் 360 பேருக்கே கொரோனா பரிசோதனை செய்யப்பட்டது
### அரச வைத்திய அதிகாரிகள் சங்கம்

(யாழ்ப்பாணம்)
சுமார் 6 இலட்சம் பேர் வசிக்கும் யாழ்ப்பாணத்தில் 360 பேருக்கு மட்டுமே கொரோனா பரிசோதனை செய்துவிட்டு யாழ்ப்பாணத்தில் கொரோனா வைரஸ் சமூகத்தில் தொற்றாக ஏற்படவில்லை என யாரும் கூறிவிட முடியாது என அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் அறிவித்துள்ளது. யாழ்ப்பாணத்தில் நேற்று புதன்கிழமை நடத்திய ஊடகவியலாளர் 15

### 93 கிலோ கஞ்சாவுடன்
## வடமராட்சியில் இருவர் கைது

(கரணவாய்)
இந்தியாவிலிருந்து வடமராட்சி கிழக்கு கடற்பகுதியூடாக இலங்கைக்கு கடத்திவரப்பட்ட 93 கிலோக்கிராம் கேரளக் கஞ்சாவுடன் இருவர் கைது செய்யப்பட்டதாக 15

# நாடளாவிய ரீதியில் சலூன்களுக்கு பூட்டு

## நடமாடும் வர்த்தகர்களுக்கும் கட்டுப்பாடு

(கொழும்பு)

நாடளாவிய ரீதியில் ஊரடங்கு அகற்றப்பட்ட, அகற்றப்படாத பகுதிகளில் நடமாடும் வர்த்தகர்கள் பின்பற்ற வேண்டிய விசேட வழிமுறைகளை பொலிஸார் அறிவித்துள்ளனர்.

நடமாடும் வர்த்தகர்கள் ஊடாக கொரோனா தொற்று பரவுவதற்கான வாய்ப்புகள் ஏற்பட்டுள்ளதால், இந்த விசேட வழிகாட்டல் அறிவித்தல் விடுக்கப்பட்டுள்ளதாக பொலிஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது.

வீடுகளுக்கு சென்று மீன், மரக்கறி, பழங்கள் மற்றும் பேக்கரி உற்பத்திகளை விற்பனை செய்வோருக்கே விசேட வழிகாட்டல்கள் வழங்கப்பட்டுள்ளன.

சுத்தமான ஆடைகளை அணிந்திருத்தல், பாதணிகளை அணிந்திருந்தல், விற்பனை நடவடிக்கையின்போது முகக் கவசங்களை அணிந்திருத்தல், கைகளுக்கு தொற்று நீக்கிகளை பயன்படுத்துதல் ஆகிய செயற்பாடுகளை நடமாடும் விற்பனையாளர்கள் பின்பற்ற வேண்டும் என பொலிஸார் அறிவித்துள்ளனர்.

பேக்கரி உற்பத்திகளின் போதும், ஏனைய உணவுப் பொருட்களை விற்பனை செய்யும் போதும் உரிய உபகரணங்களை பயன்படுத்துதல் மற்றும் உணவுப்பொருட்களை கடதாசியில் சுற்றி விற்பனை செய்தல் ஆகிய வழிமுறைகளை கட்டாயம் பின்பற்ற வேண்டும் என பொலிஸார் அறிவித்துள்ளனர்.

பணத்தைப் பெற்றுக் கொண்டதன் பின்னர் கைகளுக்கு தொற்று நீக்கி பயன்படுத்தி சுத்தப்படுத்தியதன் பின்னர் ஏனைய பொருட்களை தொடுமாறும் விற்பனையாளர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

வாகனங்களில் பொருட்களை விற்பனை செய்யும்போது, பொருட் கொள்வனவு செய்பவர்கள் ஒரு மீற்றர் தூரத்தை பேணுவதை உறுதி செய்ய வேண்டும் எனவும் பொலிஸார் கூறியுள்ளனர்.

இதேவேளை சுகாதார அமைச்சர் பவித்ரா வன்னியாராச்சி தலைமையில் கூடிய விசேட வைத்திய நிபுணர்களுடனான சந்திப்பில் பல்வேறு முடிவுகள் எடுக்கப்பட்டுள்ளன. குறிப்பாக ஊரடங்கு தளர்த்தப்பட்டுள்ள பகுதிகளில் மக்களின் நடமாட்டம் உள்ளிட்ட விடயங்கள் ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டுள்ளன.

இந் நிலையில் விசேடமாக சமூக இடைவெளியை பேணும் நோக்குடன் முச்சக்கர வண்டியில் பயணிக்கும் போது பின் ஆசனத்தில் இருவர் மட்டுமே பயணிக்க முடியும் என விசேட கட்டுப்பாடு விதிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் பதிவாகியுள்ள தகவல்கள் பிரகாரம், பண்டாரநாயக்க மாவத்தை பகுதியில் தொற்றாளரான சிகை அலங்கார நிலைய ஊழியர். அப்பகுதியில் சிகையலங்காரம் செய்த 25 பேர் வரை கொரோனா தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டுள்ள விடயம் பேசப்பட்டுள்ளது.

இவ்வாறான பின்னணியில் கொரோனா தொற்று பரவுவதற்கு ஏதுவான காரணிகளை கட்டுப்படுத்தும் நோக்கில் நாடளாவிய ரீதியில் அனைத்து சிகை அலங்கார நிலையங்களையும் மறு அறிவித்தல் வரை மூட அரசாங்கம் உத்தரவிட்டுள்ளது.

இதேவேளை, ஊரடங்கு தளர்த்தப்பட்டுள்ள பகுதிகளில், பஸ் போக்குவரத்தில் பொதுமக்கள் ஈடுபடும்போது சமூக இடைவெளி தொடர்பில் பிரச்சினைகள் நிலவுவதால், பஸ் போக்குவரத்தையும் அத்தியாவசிய சேவைகளுக்கு மட்டுப்படுத்துவது குறித்து ஆராயப்பட்டு வருகின்றது.

ஏற்கெனவே புகையிரத போக்குவரத்து அவ்வாறு மட்டுப்படுத்தப்பட்டுள்ள நிலையில், பஸ்களில் பயணம் செய்ய வேண்டுமாயின் அத்தியாவசிய சேவை குறித்த நிறுவனத்தின் கடிதத்தை கட்டாயமாக்குவது தொடர்பில் கலந்துரையாடல்கள் இடம்பெற்று வருவதாக அறிய முடிகின்றது. (ம-3)

# கொரோனா COVID - 19

## இலங்கையின் நாளாந்த நிலைமை அறிக்கை

| தொற்றுக்கு உள்ளானவர்கள் | குணமடைந்தவர்கள் | மரணமடைந்தவர்கள் | சிகிச்சை பெற்று வருபவர்கள் |
|---|---|---|---|
| 330 | 105 | 007 | 218 |

## உலகளாவிய ரீதியில் நாளாந்த நிலைமை ஒரே பார்வையில்...

| உலகளவில் தொற்றுக்குள்ளானவர்கள் | உலகளவில் குணமடைந்தவர்கள் | உலகளவில் மரணமடைந்தவர்கள் |
|---|---|---|
| 2,609,722 | 714,202 | 182,205 |

| நாடுகள், உலகம் | மொத்த பாதிப்பு | புதிய தொற்றாளர்கள் | மொத்த மரணம் | இன்றைய மரணம் |
|---|---|---|---|---|
| உலகம் | 2,609,722 | 53,962 | 182,205 | +4,762 |
| ஐ.அமெரிக்கா | 829,600 | +10,856 | 46,170 | +852 |
| இத்தாலி | 187,327 | +3,370 | 25,085 | +437 |
| ஸ்பெய்ன் | 208,389 | +4,211 | 21,717 | +435 |
| சீனா | 82,788 | +30 | 4,632 | 0 |
| ஜேர்மனி | 149,771 | +1,318 | 5,211 | +125 |
| பிரான்ஸ் | 159,877 | +1,827 | 21,340 | +544 |
| ஈரான் | 85,996 | +1,194 | 5,391 | +94 |
| ஐ.இராச்சியம் | 133,495 | +4,451 | 18,100 | +763 |
| இந்தியா | 20,471 | 391 | 652 | +7 |

இன்று அதிகாலை 12.20 நிலைவரப்படி

# அரசியல் லாபத்திற்காகவே நிவாரணம்

## அரசு மீது சம்பிக்க காட்டம்

## குண்டுத்தாக்குதலுக்கு மைத்திரியே பொறுப்பு



(கொழும்பு)
கொடிய கொரோனா வைரஸால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணப் பணிகளைக்கூட, அரசாங்கம் தனது அரசியல் சுயலாபத்திற்காகத்தான் பயன்படுத்துகின்றது என முன்னாள் அமைச்சர் சம்பிக்க ரணவக்க குற்றம்சாட்டினார்.

கொழும்பில் நேற்று முன்தினம் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் அவர் மேற்கண்டவாறு குற்றம்சாட்டினார்.

"உயிர்த்த ஞாயிறு தாக்குதல் இடம்பெற்ற காலப்பகுதியில் நானும், அந்த அரசாங்கத்தின் அமைச்சரவையில் இருந்தாலும், இதற்கு முழுமையான பொறுப்பை முன்னாள் ஜனாதிபதி தான் ஏற்க வேண்டும்.

புலனாய்வுத் துறையினர் தகவல்களை வழங்கியும், அவர் உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளாதமையின் விளைவாகவே நாம் இந்தப் பாரிய துன்பியல் சம்பவத்திற்கு முகம் கொடுக்க வேண்டி ஏற்பட்டது.

கடந்த 2018 ஆம் ஆண்டு ஒக்டோபரில் இடம்பெற்ற அரசியல் முரண்பாடுகளை அடுத்து, பாதுகாப்புச் சபைக்கூட்டங்களுக்கு அவர் பிரதமரை அழைக்கவில்லை. இருப்பினும், பிரதமர் எனும் வகையில் அவர் இதில் கலந்து கொண்டிருக்க வேண்டும். இதனால், பிரதமரும் இந்த சம்பவத்திற்குப் பதில் கூறவேண்டும்.

எவ்வாறாயினும், இந்தக் குண்டுவெடிப்பு இடம்பெற்று மூன்று நாட்களில் சஹ்ரானின் ஒட்டுமொத்த குழுவினரையும் அடையாளம் கண்டு நாம் கைது செய்திருந்தோம்.

அத்தோடு, நாட்டில் ஏற்படவிருந்த பாரிய மதப்பிரச்சினையையும் நாம் தடுத்து நிறுத்தியிருந்தோம். இதற்காக பாதுகாப்புத் தரப்பினருக்கு நாம் எமது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

இந்த நிலையில், தற்போது நாம் கொரோனா வைரஸ் பிரச்சினைக்கு முகம் கொடுத்து வருகின்றோம். எதிர்க்கட்சி என்றாலும், எமது அரசியல் முரண்பாடுகளைத் தவிர்ந்து நாம் அனைவருக்கும் ஒத்துழைக்கத் தயாராகவே இருக்கின்றோம்.

கொரோனா அச்சுறுத்தல் தொடர்பாக உலக சுகாதார ஸ்தாபனத்தால் எச்சரிக்கை விடுக்கப்பட்ட காலத்திலேயே, விமான நிலையங்களை அரசாங்கம் மூடியிருந்தால் இந்த நோய்த்தாக்கம் இலங்கையில் ஏற்பட்டிருக்காது.

தற்போது, இதனை வைத்து அரசியல் இலாபத்தைத் தேடவே அரசாங்கம் முயற்சித்து வருகிறது. ஊரடங்குச் சட்டம் தொடர்பாகக் கூட அரசாங்கத்துக்கு ஒரு தெளிவின்மை காணப்படுவதை அவதானிக்கக் கூடியதாக இருக்கிறது.

நிவாரணப் பங்கீடு முதல் அனைத்தையும் அரசாங்கம், அரசியல் நோக்கத்திற்காகத்தான் மேற்கொண்டு வருகிறது.

எனவே, இந்த நிலைமையை வைத்து அரசியல் இலாபத்தை தேட முயற்சிக்க வேண்டாம் என நாம் அரசாங்கத் தரப்பினரிடம் கேட்டுக் கொள்கின்றோம்" என சம்பிக்க மேலும் தெரிவித்தார். (இ-7)

# தேர்தலுக்கு முகம் கொடுக்க அச்சம் எதிர்க்கட்சியினர் எதிர்க்கக்காரணம்

## வாசுதேவ விமர்சனம்



(கொழும்பு)
தேர்தலுக்கு முகம் கொடுக்க அச்சப்பட்டே எதிர்க்கட்சியினர் தேர்தலை நடத்த எதிர்ப்பை வெளியிடுகின்றனர் என முன்னாள் இராஜாங்க அமைச்சர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்தார்.

பொதுத் தேர்தலுக்கான திகதி அறிவிக்கப்பட்ட நிலையில், நேற்று முன்தினம் அரசியல் கட்சி முக்கியஸ்தர்களுடன் தேர்தல்கள் ஆணைக்குழுத் தலைவர், விசேட கலந்துரையாடல் ஒன்றில் ஈடுபட்டார்.

குறித்த கலந்துரையாடலின் நிறைவில் ஊடகங்களுக்குக் கருத்து வெளியிடும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

"இந்தக் கலந்துரையாடலின் போது, சில தரப்பினர் தேவையில்லாத கருத்துக்கள் மற்றும் சட்டச்சிக்கல்களைக் கூறி, பொதுத் தேர்தலை நடத்த விடாமல் தடுக்க முயற்சிகளை மேற்கொண்டமையைத்தான் அவதானிக்க முடியுமாக இருந்தது.

கொரோனா வைரஸ் தொற்று நிலவரம் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்படுமானால் ஜூன் 20 ஆம் திகதி பொதுத் தேர்தலை நடத்த எதிர்ப்பை வெளியிட எந்தவொரு காரணமும் கிடையாது.

எம்மைப் பொறுத்தவரை தேர்தலுக்கு முகம் கொடுக்க அச்சப்பட்டே எதிர்த்தரப்பினர் தேர்தலை நடத்த எதிர்ப்பை வெளியிடுகின்றனர்" எனத் தெரிவித்தார். (இ-7)


# பொன்சேகாவின் பதவியைப் பறித்தார் ரணில்!



(கொழும்பு)
ஐக்கிய தேசியக் கட்சியின் களனி தொகுதி அமைப்பாளர் பதவியிலிருந்து முன்னாள் அமைச்சர் பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா நீக்கப்பட்டார்.

அவருக்குப் பதிலாக புதிய அமைப்பாளராக முன்னாள் இராஜாங்க அமைச்சர் ருவான் விஜேயவர்த்தன நியமிக்கப்பட்டார். ஐ.தே.க.தலைவர் ரணில் விக்கிரமசிங்கவால் இந்த நியமனம் வழங்கப்பட்டது.

சஜித் பிரேமதாஸ தலைமையிலான ஐக்கிய மக்கள் சக்தியில் சரத் பொன்சேகா இணைந்தமையால் அமைப்பாளர் பதவி பறிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (இ-7)



# உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் தொடர்பில் 14 சிறப்புக்குழுக்கள் ஊடாக தீவிர விசாரணை

(கொழும்பு)
நாட்டில் 8 இடங்களில் கடந்த வருடம், உயிர்த்த ஞாயிறு தினத்தன்று (21 ஆம் திகதி) இடம்பெற்ற தொடர் தற்கொலைக் குண்டுத் தாக்குதல்கள் தொடர்பில் பிரதான விசாரணைகள் தற்போது 14 சிறப்புக் குழுக்கள் ஊடாக முன்னெடுக்கப்பட்டுவருவதாகவும் தற்போதும் 92 சந்தேக நபர்கள் பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் அந்த சிறப்புக் குழுக்களின் விசாரணைகளுக்கு உட்படுத்தப்பட்டுள்ளதாகவும் பொலிஸ் பேச்சாளர் பொலிஸ் அத்தியட்சகர் சட்டத்தரணி ஜாலிய சேனாரட்ன தெரிவித்தார்.

சி.ஐ.டி. எனப்படும் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தின் 11 பொலிஸ்குழுவினரும் சி.ரி.ஐ.டி எனப்படும் பயங்கரவாதத் தடுப்பு மற்றும் விசாரணைப் பிரிவின் 3 பொலிஸ் குழுக்களும் இந்த விசாரணைகளை முன்னெடுப்பதுடன், இதுவரை மொத்தமாக இந்த விவகாரத்தில் கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் 197 பேர் எனவும் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் ஜாலிய சேனாரட்ன கூறினார். அதில் 119 பேர் சி.ஐ.டி. யினராலும் 78 பேர் சி.ரி.ஐ.டி. யினராலும் கைது செய்யப்பட்டுள்ளதாக அவர் சுட்டிக்காட்டினார்.

எவ்வாறாயினும் கைதுசெய்யப்பட்ட 197 பேரில் 92 பேர் தற்போது இவ்விரு பொலிஸ் விசாரணைப் பிரிவுகளிலும் தடுத்து வைக்கப்பட்டு விசாரணைக்குட்படுத்தப்பட்டுள்ளதாகவும் ஏனையோர் நீதிமன்றங்களில் ஆஜர் செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டும் சிலர் பிணையில் விடுவிக்கப்பட்டும் உள்ளதாக அவர் கூறினார்.

"தற்கொலைக் குண்டுத் தாக்குதல்கள் தொடர்பில் சி.ஐ.டியினரால் 119 பேர் இதுவரை கைது செய்யப்பட்டுள்ளனர். அவர்களில் 33 பேர் விளக்கமறியலிலுள்ள நிலையில், தற்போதும் 40 பேர் சி.ஐ.டி. தடுப்புக் காவலில் வைத்து விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர்.

பயங்கரவாதத் தடுப்பு மற்றும் விசாரணைப் பிரிவினரால் கைது செய்யப்பட்ட சந்தேகநபர்களின் எண்ணிக்கை 78 ஆகும். அவர்களில் 52 பேர் தற்போதும் தடுத்து வைக்கப்பட்டு விசாரிக்கப்பட்டு வருகின்றனர்" என பொலிஸ் பேச்சாளர் கூறினார்.

இதனைவிட உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல்களுடன் தொடர்புடைய மேலும் சில சம்பவங்கள் குறித்து கொழும்பு குற்றத் தடுப்புப் பிரிவின் ஊடாக விசேட விசாரணைகள் இடம்பெறுவதுடன், குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தின் கீழ் கொண்டுவரப்பட்ட நிதிக் குற்றப் புலனாய்வுப் பிரிவு மற்றும் கணனிக் குற்ற விசாரணைப் பிரிவின் உதவிகளும் பிரதான விசாரணைகள் தொடர்பில் பெற்றுக்கொள்ளப்பட்டன.

முன்னதாக கொழும்பு மற்றும் நீர்கொழும்பு, மட்டக்களப்பு ஆகிய இடங்களில் கடந்த 2019 ஏப்ரல் 21 ஆம் திகதி 8 தொடர் குண்டுவெடிப்புச் சம்பவங்கள் பதிவாகின. கரையோர பொலிஸ் பிரிவிற்கு உட்பட்ட கொச்சிக்கடை புனித அந்தோனியார் தேவாலயம், நீர்கொழும்பு, கட்டான பொலிஸ் பிரிவிற்கு உட்பட்ட கட்டுவபிட்டி - புனித செபஸ்டியன் தேவாலயம், மட்டக்களப்பு புனித சீயோன் தேவாலயம் ஆகியன தாக்குதலுக்கிலக்கான கிறிஸ்தவ தேவாலயங்களாகும்.

இதனைவிட கொழும்பு காலி முகத்திடலுக்கு அண்மையிலுள்ள ஷங்கிரில்லா, சினமன் கிராண்ட், கிங்ஸ்பெரி ஆகிய மூன்று ஐந்து நட்சத்திர ஹோட்டல்களிலும் குண்டுத் தாக்குதல்கள் இடம்பெற்றன. மேற்படி ஆறு தாக்குதல்களும் இடம்பெற்றது ஏப்ரல் 21 ஆம் திகதி காலை 8.45 மணிக்கும் 9.30 மணிக்கும் இடையிலான 45 நிமிட இடைவெளியிலேயேயாகும்.

இந்நிலையில் அன்றைய தினம் பிற்பகல் 1.45 மணியளவில் தெஹிவளை பொலிஸ் பிரிவின் மிருகக்காட்சி சாலைக்கு முன்பாகவுள்ள "நியூ ட்ரொபிகல் இன்" எனும் சாதாரண தங்குமிட விடுதி கொண்ட ஹோட்டலில் குண்டு வெடிப்புச் சம்பவம் பதிவானது.

அதனைத் தொடர்ந்து பிற்பகல் 2.15 மணியளவில், குண்டு வெடிப்புடன் தொடர்புடையதாகக் கூறப்படும் சந்தேக நபர்கள் தொடர்பிலான விசாரணைக்குச் சென்ற கொழும்பு குற்றத் தடுப்புப் பிரிவின் அதிகாரிகளை இலக்கு வைத்து தெமட்டகொட 'மஹவில கார்டின் பகுதி சொகுசு வீட்டில் பெண் தற்கொலைக் குண்டுதாரியால் தாக்குதல் நடத்தப்பட்டது.

இந்தத் தற்கொலைக் குண்டுத் தாக்குதல்களால், 30 வெளிநாட்டவர்கள் உட்பட 278 பேர் கொல்லப்பட்டதுடன், 27 வெளிநாட்டவர்கள் உட்பட 594 பேர் காயமடைந்தமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# நாடாளுமன்றத்தேர்தல் நடக்குமா? நடக்காதா? திட்டவட்டமான அறிவிப்பை வெளியிடுங்கள்

## தேர்தல்கள் ஆணைக்குழுத் தலைவருக்கு சுரேஷ் கடிதம்

(யாழ்ப்பாணம்)

இன்றைய சூழலில் நாடாளுமன்றத் தேர்தலை நடத்துவதாக இருந்தால் தேர்தல்கள் ஆணைக்குழு தனக்கு இருக்கும் நாளாந்தப் பணிகளைவிட கூடுதல் பணிச்சுமையைச் சுமக்க வேண்டியிருக்கும் என்பதைச் சுட்டிக் காட்டி நாடாளுமன்றத் தேர்தலை நடத்துவது தொடர்பில் மீள் பரிசீலனை செய்யுமாறுகோரி ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் தலைவரும் தமிழ் மக்கள் தேசியக்கூட்டணியின் இணைப் பேச்சாளருமான சுரேஷ் பிரேமச்சந்திரன் தேர்தல்கள் ஆணைக் குழுவின் தவிசாளருக்கு கடிதம் ஒன்றை அனுப்பி வைத்துள்ளார்.



இலங்கையில் கொரோனா தொற்று முற்றுமுழுதாக ஒழிக்கப்படாத ஒரு சூழலிலும் கொழும்பு மற்றும் புறநகர்ப் பகுதிகளில் கொரோனா தொற்று நோயாளர்கள் நாளாந்தம் கண்டுபிடிக்கும் சூழலிலும் ஊரடங்குச் சட்டம் மாறிமாறி அமுல்படுத்தப்படுகின்ற சூழலிலும் மாவட்டம் விட்டு மாவட்டத்திற்கு சுமுகமாகப் பயணிக்க முடியாத சூழலிலும் தற்பொழுது ஜூன்மாதம் 20 ஆம் திகதி தேர்தல் நடைபெறும் என்று வர்த்தமானி மூலம் நீங்கள் அறிவித்துள்ளீர்கள். தேர்தலுக்கான திகதியை தேர்தல்கள் ஆணைக் குழுவே வெளியிட வேண்டும்என்ற சட்டத்திற்கமைய அத் திகதியை தாங்கள் வெளியிட்டதாகவும் கூறியுள்ளீர் கள்.

அதற்கமைவாக அஞ்சல் மூலம் வாக்களிக்க விரும்புபவர்கள் மே மாதம் 4 ஆம் திகதிக்குள் தங்களது விண்ணப்பங்களை மாவட்ட தெரிவத்தாட்சி அலுவலகங்களில் விண்ணப்பிக்குமாறும் கோரியிருந்தீர்கள்.


புதிய திகதியை அறிவித்ததன் பின்னர் நீங்கள் அரசியல் கட்சிகளுடன் நடத்திய உரையாடலைத் தொடர்ந்து ஊடகங்களுக்குச் செய்தியைத் தெரிவிக்கின்ற பொழுது, ஜூன் 20 ஆம் திகதி என்பதும் தேர்தல் நடத்துவதற்கான நிச்சயமான திகதி அல்ல கொரோனா வைரஸ் முற்றாக ஒழிக்கப்பட்டதன் பின்னரே தேர்தல் நடைபெறும் என்றும் அறிவித்திருந்தீர்கள். உங்களின் இந்த அறிவிப்பானது கட்சிகளின் மத்தியிலும் சுயேட்சைக் குழுக்கள் மத்தியிலும் அரச ஊழியர்கள் மத்தியிலும் பல்வேறு குழப்பங்களையும் சந்தேகங்களையும் உருவாக்கியிருக்கின்றது. வர்த்தமானி அறிவித்தல் ஊடாக,நீங்கள் குறிப்பிட்ட ஜூன் 20 ஆம் திகதியை தேர்தல் திகதியாக எடுத்துக் கொள்வதா? அல்லது ஊடகங்களுக்கு நீங்கள் கூறியது போன்று கொரோனா வைரஸ் முடியும் வரை தேர்தல் நடைபெறாது என்பதை எடுத்துக் கொள்வதா? தேர்தல் நடக்காது என்பது திட்டவட்டமானால் தபால் மூல வாக்களிப்பிற்கான உங்கள் அறிவுரை செல்லுபடியற்றதாகிவிடும். ஆகவே தபால்மூல வாக்களிப்பிற்கான பதிவுகளை மேற்கொள்வது தற்பொழுது அவசியமில்லை என்பதை நீங்கள் அறிவிப்பீர்களா?

அதனைப் போன்றே அரசியல் கட்சிகளும் சுயேட்சைக் குழுக்களும் தேர்தல் நடைபெறுமா? மாட்டாதா என்ற குழப்ப நிலைக்குள் இருக்கிறார்கள். நீங்கள் தேர்தல் தொடர்பில் வெளியிட்ட வர்த்தமானி அறிவித்தலை உத்தியோகபூர்வமானது என்று ஏற்றுக்கொள்வதா? அல்லது ஊடகவியலாளர்களிடம் தெரிவித்த கருத்தை ஏற்றுக்கொள்வதா?

எனவே அரசியல் கட்சிகளுக்கும் சுயேட்சைக்குழுக்களுக்கும் அரச ஊழியர்களுக்கும் தேர்தல் தொடர்பில் உறுதியானதும் தெளிவானதும் உத்தியோகபூர்வமானதுமான அறிவித்தல் ஒன்று அவசியமாகின்றது.

எனவே ஜனநாயகத்திற்கு மதிப்பளித்து ஒரு நீதியும் நேர்மையுமான தேர்தலை நடத்துவதற்கு இன்றைய சூழல் பொருத்தமானதாக இருக்கும் என்று நாங்கள் கருதவில்லை. மக்களையும் அரச ஊழியர்களையும் அரசியல் கட்சிகள் மற்றும் சுயேட்சைக் குழுக்களையும் குழப்ப நிலைக்குள் வைத்திருக்காமல் ஒரு திட்டவட்டமான உத்தியோக்கபூர்வமான அறிவிப்பு ஒன்றை வெளியிடுவீர்கள் என்று நாங்கள் எதிர்பார்க்கின்றோம் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# கால்களால் இயக்கும் கைகளைக் கழுவும் இயந்திரம் கண்டுபிடிப்பு



(வெலிகந்தை)

வெலிகந்தை , மொணரதென்ன, பகுதியைச் சேர்ந்த இளைஞன் கையை நீரினால் கைகள் கழுவும் இயந்திரம் ஒன்றை உருவாக்கினார்.

இந்த இயந்திரம் பாதங்களால் செயற்படுத்தக்கூடிய வகையில் உருவாக்கப்பட்டது.

வெலிகந்தை வைத்தியசாலையில் ஸ்தாபிக்கப்பட்டுள்ள கொவிட்-19 சிறப்பு சிகிச்சை மையத்திற்கு நேற்று முன்தினம் குறித்த இளைஞனால் அன்பளிப்பாக வழங்கப்பட்டது.

3000 ரூபாய் செலவில் குறித்த இயந்திரம் கண்டுபிடிக் கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# கடிதங்களை பகிர்ந்தளிக்க தபால் சேவை மீள ஆரம்பம்

(கொழும்பு)

கடிதங்களை பகிர்ந்தளிக்க தபால் சேவைகள் மீள ஆரம்பிக்கப்பட்டன.

ஊரடங்கு உத்தரவு அமுலாகாத பகுதிகளில் தபால் சேவை மீள ஆரம்பிக்கப்பட்டதாக தெரிவிக்கப்பட்டது.

கொரோனா வைரஸ் தொற்று அச்சம் காரணமாக கடிதங்களை பகிர்ந்தளிக்கும் நடவடிக்கை உடனடியாக அமுலுக்கு வரும் வகையில் கடந்த ஒரு மாதம் இடைநிறுத்தி வைக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# இந்திய ராணுவம் இலங்கை வரும் செய்திகளில் உண்மையில்லை

(கொழும்பு)

கொரோனா வைரஸை எதிர்த்துப் போராடுவதற்காக இந்திய இராணுவம் இலங்கை வரும் என வெளியான செய்திகளில் உண்மையில்லை என உயர் மட்ட செய்திகள் மூலம் தெரிய வருகிறது.

இலங்கை, பங்களாதேஷ், பூட்டான் மற்றும் ஆப்கானிஸ்தான் ஆகிய நாடுகளுக்கு தனி இராணுவக் குழுக்களை அனுப்ப இந்திய இராணுவம் தயாராகி வருவதாக அந் நாட்டு பாதுகாப்பு அமைச்சை மேற்கோள்காட்டி செய்திகள் வெளியாகியிருந்தன.

கொரோனா வைரஸ் தொற்றை எதிர்த்துப் போராடுவதற்கு பிராந்தியத்தில் உள்ள அனைத்து நட்பு நாடுகளுக்கும் உதவி வழங்குவதற்கான இந்தியாவின் கொள்கையின் ஒரு பகுதியாக இந்த நடவடிக்கை எடுக்கப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டது.

இந்நிலையில் இது ஒரு போலியான தகவல் என இலங்கையிலுள்ள இந்திய உயர்ஸ்தானிகராலயத்தின் வட்டார தகவல்கள் தெரிவித்தன. (இ-7)

# குண்டுத் தாக்குதலில் பலியானவர்களுக்கு யாழ்.முஸ்லிம்கள் அஞ்சலி, மரநடுகை



(யாழ்ப்பாணம்)

இலங்கையில் உயிர்த்த ஞாயிறு தினத்தன்று இடம்பெற்ற குண்டுத் தாக்குதலில் கொல்லப்பட்ட அனைவருக்கும் யாழ். முஸ்லிம்கள் அஞ்சலி செலுத்தினர்.

கடந்த வருடம் (21.04.2019) அன்று இலங்கையிலுள்ள தேவாலயங்கள் உள்ளிட்ட இடங்களில் நடத்தப்பட்ட மிலேச்சத்தனமான குண்டுத் தாக்குதலில் பலியான அப்பாவி மக்கள், குழந்தைகளை நினைவுகூர்ந்து யாழ். ஒஸ்மானியாக் கல்லூரி வளாகத்தில் நேற்று முன்தினம்(21) மரநடுகை நிகழ்வொன்றும் முன்னெடுக்கப்பட்டது.

யாழ்.முஸ்லிம் இளைஞர் கழக அங்கத்தவர்களால் இந் நிகழ்வு முன்னெடுக்கப்பட்டது.

குண்டுத் தாக்குதலில் பலியானவர்களுக்கு அஞ்சலி செலுத்தப்பட்டு பலியானவர்களின் குடும்பங்களுக்கு அனுதாபம் வெளியிடப்பட்டது.

இந் நிகழ்வில் யாழ். முஸ்லிம் இளைஞர் கழகத்தின் தலைவர் என்.எம். அப்துல்லாஹ், செயலாளர் என். மில்ஹான் பாரிஸ் மற்றும் நிர்வாக அங்கத்தவர்கள் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது. (இ-18)

# பொதுப்போக்குவரத்தில் ஈடுபடும் மக்களுக்கு விசேட கையேடுகள்

## யாழ்.அரச அதிபர் தகவல்

(யாழ்ப்பாணம் )

வெளிமாவட்டங்களைச் சேர்ந்தவர்கள் செல்வதற்கான போக்குவரத்து ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாக யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் கணபதிப்பிள்ளை மகேசன் தெரிவித்தார்.

யாழ்.மாவட்ட செயலகத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற கலந்துரையாடலின் பின்னர், ஊடகங்களுக்குக் கருத்து தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

ஊரடங்குச் சட்டம் அமுல்படுத்தப்பட்ட பின்னர் யாழ்ப்பாணம் மாவட்டத்தின் நிலவரம் தொடர்பாக கலந்துரையாடினோம். மாவட்டத்தின் பாதுகாப்பான நிலைமையை தக்கவைத்துக்கொள்வதற்கும், உறுதிப்படுத்திக் கொள்வதற்கும், சில நடவடிக்கைகளை எடுக்க வேண்டியிருக்கின்றது.

போக்குவரத்தில் எவ்வாறு நடந்துகொள்ள வேண்டும் என்பது பற்றி, யாழ்.போதனா வைத்தியசாலை பணிப்பாளரும், பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளரும் கருத்துக்களைத் தெரிவித்தனர்.



பொதுப் போக்குவரத்தில் ஈடுபடும் மக்களுக்கான போக்குவரத்து நடைமுறைகளுக்கான கையேடுகள் மற்றும் அறிவுறுத்தல்கள் பிரதேச செயலாளர்களால், அந்தந்தப் பிரதேச மக்களுக்குத் தெரிவிக்கப்படும்.

ஊரடங்கு உத்தரவு தளர்த்தப்பட்ட போதிலும், வெளி மாவட்டங்களுக்கான போக்குவரத்துக்கள் அவசியத்தின் அடிப்படையில் வடமாகாண ஆளுநரின் முயற்சியின் பயனாகவும், இராணுவத் தளபதியுடனும் மேற்கொண்ட கலந்துரையாடலின் பயனாகவும், ஊரடங்கு அமுலில் உள்ள மாவட்டங்கள் தவிர்ந்த ஏனைய மாவட்டங்களுக்கு செல்வதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

இந்த ஏற்பாடுகளை, மாவட்ட செயலகம், பாதுகாப்புப் படைத் தரப்பினர், சுகாதார திணைக்களம் ஆகிய மூன்று தரப்பினரும் இணைந்தே, இந்த முடிவுகளை எடுத்துள்ளோம்.

வெளிமாவட்டங்களைப் சேர்ந்தவர்களை பட்டியலிட்டுள்ளோம். அவர்களின் மாவட்ட அரசாங்க அதிபர் மற்றும் பொலிஸார் உள்ளிட்டவர்களுடன் கலந்துரையாடி, வெளிமாவட்டத்தவர்களை அனுப்புவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

வெளிமாவட்டத்தைச் சேர்ந்தவர்கள், யாழ்.மாவட்டத்திலிருந்து செல்லும் போது, அந்த மாவட்டத்தில் பெயர்கள் சரிபார்க்கப்பட்டு, அங்கு அவர்களுக்குரிய பரிசோதனைகள் முன்னெடுக்கப்படும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-101)

# உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றவிருக்கும்

# வடக்கு மாணவர்களே! கல்வி ஒளி- ஒலிபரப்பினை தொலைக்காட்சியில் பார்த்துப் பயன்பெறுங்கள்

## வடமாகாணக் கல்விப் பணிப்பாளர் உதயகுமார் அறிவுரை



(யாழ்ப்பாணம்)

கொவிட்-19 தொற்றுக் காரணமாக வீட்டிலிருக்கும் உயர்தரப் (2020 ஓகஸ்ட் மாதம்) பரீட்சைக்குத் தோற்றவிருக்கும் மாணவர்களுக்கு இறுதித் தவணைக்கான பாட அலகுகளைக் கற்பதற்காக இலங்கைக் கல்வி அமைச்சு, இலங்கைப் பரீட்சைத் திணைக்களம், வடக்கு மாகாணக் கல்வி அமைச்சு மற்றும் வடக்கு மாகாணக் கல்வித் திணைக்களம் ஆகியன இணைந்து தேசிய கல்வி நிறுவகத்தின் அனுசரணையுடன் நேத்திரா (Nethra) தொலைக்காட்சியில் ஒளி-ஒலிபரப்புவதற்காக கல்வி நிகழ்ச்சிச் செயற்றிட்டத்தின் தயாரிப்புக்கள் வடமாகாணக் கல்வித் திணைக்களத்தின் கற்றல் உபகரண அபிவிருத்திப் பிரிவில் (LMDMU) கடந்த 14.04.2020 முதல் நடைபெற்று வருகின்றது.

இக்கல்வி ஒளி-ஒலிபரப்பினை நேத்திரா தொலைக் காட்சியில் இலங்கைக் கல்வி அமைச்சினால் வெளியிடப்பட்ட நேர அட்டவணைக்கமைவாக மாணவர்கள் பார்வையிட்டுப் பயன்பெறுவதுடன் ஏற்கனவே LMDM அலகினால் தயாரிக்கப்பட்ட இலத்திரனியல் கற்றல் மென்பொருளை வடமாகாணக் கல்வித் திணைக்களத்தின் EMIS-NP இணையத் தளத்திலும் LMDM அலகின் LMDM Unit, youtube தளத்திலும் பார்த்துப் பயன்பெற முடியும் என வடமாகாணக் கல்விப் பணிப்பாளர் செ.உதயகுமார் தெரிவித்தார்.

பௌதீகவியல், உயிரியல், தொழில்நுட்பப் பாடங்கள், விவசாய விஞ்ஞானம், தமிழ், புவியியல் ஆகிய பாடங்களுக்கான தயாரிப்புக்கள் வடமாகாணத்திலுள்ள ஆசிரிய வளவாளர்களைக் கொண்டு தயாரிக் கப்படுகின்றன என அவர் மேலும் தெரிவித்தார்.(இ



வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603
021 567 1532

# சுகாதார நிலவரம் தொடர்பாக முழுமையான அறிக்கையை முன்வைக்க முடியுமா? - சஜித்



(கொழும்பு)

சுகாதார நிலவரம் தொடர்பாக, முழுமையான அறிக்கையொன்றை சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் நாட்டு மக்களிடம் முன்வைக்க முடியுமா? என முன்னாள் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ கேள்வி எழுப்பினார்.

பொதுத் தேர்தலுக்கான திகதி அறிவிக்கப்பட்ட நிலையில், நேற்று முன்தினம் அரசியல் கட்சி முக்கியஸ்தர்களுடன் தேர்தல்கள் ஆணைக்குழுத் தலைவர் விசேட கலந்துரையாடல் ஒன்றில் ஈடுபட்டார்.

குறித்த கலந்துரையாடலின் நிறைவில் ஊடகங்களுக்குக் கருத்து வெளியிடும் போதே சஜித் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

"இலங்கையின் சுகாதார நிலவரம் தொடர்பாக, முழுமையான அறிக்கையொன்றை சுகாத்ர பணிப்பாளர் நாட்டு மக்களிடம் முன்வைக்க முடியுமா? எனக் கேட்கின்றோம்.

அப்படியானால், நாம் நாளைக்கே பொதுத் தேர்தல் செயற்பாடுகளில் ஈடுபடத் தயாரர்கவே இருக்கின்றோம்" எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

## நீங்காத நினைவலைகள்



மலர்வு:- 1932.01.18
உதிர்வு:- 2020.03.24
திருமதி.மார்க்கண்டு
சிவக்கொழுந்து(சிவநகர்)



உதிர்வு:- 2020.03.25
திரு.நாகலிங்கம்
கந்தசாமி(சிவநகர்)



மலர்வு:- 1932.08.10
உதிர்வு:- 2020.04.09
திருமதி.
அந்தோனிப்பிள்ளை
அந்தோனியாபிள்ளை
(சிவநகர்)

எமது உறவுகளை நினைவு கூர்வதோடு இவர்களது குடும்பத்தினருக்கும்
எமது ஆழ்ந்த அனுதாபங்கள்

(C-9525)

தகவல்:- உருத்திரபுரம் உதவும் கரங்கள் கனடா அமைப்பு

## இராசி பலன்

**மேடம்:** பணியில் சிறு மன உளைச்சல் ஏற்படலாம், உடல் நலனில் அதிக அக்கறை காட்ட முற்படுவீர்கள், கனவு பலிதமுண்டு, வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள்.

**இடபம்:** சுபகாரியச் செலவுகள் ஏற்படலாம், பக்குவமாகப் பேசி காரியங்களைச் சாதிப்பீர்கள், பயணத்தால் பலனுண்டு, விருப்பங்கள் நிறைவேற விநாயகரை வழிபட வேண்டிய நாள்.

**மிதுனம்:** இயல்பான வாழ்க்கையில் இன்பங்கள் கூடும் நாள், எண்ணிய காரியங்கள் உடனுக்குடன் நிறைவேறலாம், வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும்.

**கடகம்:** வாழ்க்கைத் தரம் உயர வழிவகை செய்வீர்கள், எடுத்த காரியங்கள் எளிதில் கைகூடும், சுப தகவல்கள் வந்து சேரலாம், உங்கள் யோசனைக்கு நல்ல பாராட்டுக்கள் கிடைக்கும்.

**சிம்மம்:** தொழிலில் போட்டியாக இருந்தவர்கள் மனம் மாறுவர், வீட்டை சிரமைப்பதில் ஆர்வம் காட்டுவீர்கள், ஆரோக்கியத்தில் தெளிவு பிறக்கும், பேச்சில் இனிமை தென்படும்.

**கன்னி:** வெளியூர் பயணங்களின் போது விழிப்புணர்வு அவசியம், கவலைகள் தீர கணபதியை வழிபட வேண் டிய நாள், ஆரோக்கியத்தில் அச்சுறுத்தல்கள் ஏற்பட்டு உற்சாகம் குறையலாம்.

**துலாம்:** குடும்பத்தினரிடையே அந்நியோன்னியம் அதிகரிக்கும், சென்ற இடத்தில் செல்வாக்கு மேலோங்கும் நாள், புதிய பொருட்களின் சேர்க்கையுண்டு, போசன சுகமுண்டு.

**விருச்சிகம்:** பொதுவாழ்வில் மதிப்பும் மரியாதையும் உயரும், மனக்குழப்பம் அகலும், எண்ணங்கள் எளிதில் ஈடேறும் நாள், செய் தொழில் மேன்மையுண்டு.

**தனுசு:** நெடுநாளைய கனவுகள் நனவாகலாம், இல்லம் தேடி இனிய செய்திகள் வந்து சேரலாம், சுப நிகழ்வுகளில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு.

**மகரம்:** வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும், பெற்றோரின் நலனில் அக்கறை கூடும், செவி குளிரும் செய்திகள் வந்து சேரலாம், போசன சுகமுண்டு.

**கும்பம்:** முயற்சிகளில் முத்தான வெற்றி கிடைக்கும், நீண்ட நாளைய பிணக்குகளில் திசை திருப்பங்கள் ஏற்படலாம், குடும்ப பொறுப்புக்கள் கூடும், போசன நன்மையுண்டு.

**மீனம்:** தொழிலை விரிவுபடுத்தும் எண்ணம் உருவாகும், சுப காரியப் பேச்சுக்களில் முன்னேற்றம் காண்பீர்கள், எதிர்பாராத தனவரவுகள் இடம் பெறலாம், வாக்கு மேன்மையுண்டு.

| | | | |
|---|---|---|---|
| | சூரி,புத, சந் | சுக் | ராகு |
| | இராசி பலன் | | |
| | கிரகநிலை<br>சந்திராஷ்டமம்<br>அத்தம், சித்திரை | | |
| குரு,செவ் | | | |
| சனி,கேது | | | |

23.04.2020
சித்திரை 10, வியாழக்கிழமை
அமாவாசை முற்பகல் 8.42 மணிவரை
அச்சுவினி பிற்பகல் 4.34 மணிவரை
சுபநேரம் 7.30-9.00 மணிவரை
இராகுகாலம் 1.30-3.00 மணிவரை
நல்ல அறிவுரை விலைமதிப்பற்றது

வளவன்

# அத்தியாவசிய சேவைகள் வைரஸை கட்டுப்படுத்த உதவும் வகையில் மேற்கொள்ளப்பட வேண்டும்

## அதிகாரிகளுக்கு ஜனாதிபதி பணிப்புரை

**(கொழும்பு)**

**ஊரடங்கு சட்டத்தை தளர்த்தியதன் பின்னர் வைரஸைக் கட்டுப்படுத்துவதற்கு உதவும் வகையில் குறைந்தளவானோரின் பங்குபற்றுதலுடன் அத்தியாவசிய சேவைகளை முறையாக பேணுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தெரிவித்தார்.**



அரச மற்றும் தனியார் துறைகளின் சேவைகளை மக்கள் வாழ்க்கையை இயல்பு நிலையில் பேணுவதற்கு உதவும் வகையில் திட்டமிடுமாறும் ஜனாதிபதி அதிகாரிகளுக்குப் பணிப்புரை வழங்கினார்.

அத்தியாவசிய சேவைகளை வழங்கும் முக்கிய அமைச்சுக்களின் செயலாளர்கள் மற்றும் நிறுவனத் தலைவர்களுடன் நேற்று முன்தினம் பிற்பகல் ஜனாதிபதி அலுவலகத்தில் இடம்பெற்ற கலந்துரையாடலின் போதே ஜனாதிபதி மேற்கண்டவாறு தெரிவித்தார்.

நீர்க்குழாய்களை பதித்தல், வீதிகளை நிர்மாணித்தல் போன்ற கட்டுப்பாட்டுடன் செய்யக்கூடிய அபிவிருத்தி பணிகளை உடனடியாக ஆரம்பிக்க வேண்டியதன் முக்கியத்துவத்தையும் ஜனாதிபதி சுட்டிக்காட்டினார்.

ஊழியர்களை கடமைக்காக அழைக்கும் போது பின்பற்ற வேண்டிய நடைமுறைகள் பற்றியும் அறிவுறுத்திய ஜனாதிபதி வழங்கப்பட்ட பரிந்துரைகளைப் பின்பற்றி ஊழியர்களை அழைப்பதை நிறுவனத் தலைவர்கள் தீர்மானிக்க வேண்டும் என்றும் தெரிவித்தார்.

மேல் மாகாணம் உட்பட ஊரடங்குச் சட்டம் தொடர்ச்சியாக அமுலிலுள்ள பிரதேசங்களில் சேவைகளை பேணுவதற்கான திட்டத்தைத் தயாரிக்குமாறும் ஜனாதிபதி பணிப்புரை வழங்கினார்.

போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான பேருந்துகளின் மூலம் விவசாய அறுவடைகளைக் கிராமங்களிலிருந்து நகரங்களுக்குக் கொண்டு வருவதற்கு நடவடிக்கை எடுப்பதன் மூலம் விவசாயிகளுக்குப் பாரிய நிவாரணம் கிடைக்கும் என்று ஜனாதிபதி குறிப்பிட்டார்.

வைத்தியசாலைகள் மற்றும் மருந்தகங்கள் வழங்கும் மருந்துகளை தபால் திணைக்களத்தின் ஊடாக விநியோகிப்பதன் மூலம் ஊரடங்குச் சட்டம் அமுலில் இருந்த காலத்தில் நோயாளிகளுக்கு பெரும் சேவையொன்று வழங்கப்பட்டது.

தபால் திணைக்களத்தின் ஊடாகப் பட்டியல்களைச் சேகரித்தல், வங்கி வைப்புக்களைப் பொறுப்பேற்றல் உள்ளிட்ட வழங்க முடியுமான சேவைகள் குறித்தும் கலந்துரையாடப்பட்டது.

கொரோனா வைரஸை ஒழிப்பதற்கு அரசாங்கம் முறையானதொரு நிகழ்ச்சித்திட்டத்தைப் பின்பற்றிய போதும் மக்கள் அறிவுறுத்தல்களை உரிய முறையில் பின்பற்றாமை நிலைமைகளைக் கட்டுப்படுத்துவதற்கு தடையாக அமைந்துள்ளது.

மக்கள் வாழ்க்கையை இயல்பு நிலைக்குக் கொண்டு வரும் நோக்குடன் ஊரடங்குச் சட்டத்தைத் தளர்த்தி சேவைகளை முன்னெடுக்கும்போதும் வைரஸை கட்டுப்படுத்தும் வகையில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்றும் ஜனாதிபதி சுட்டிக்காட்டினார்.

ஜனாதிபதியின் செயலாளர் பீ.பி ஜயசுந்தர உட்பட அமைச்சுக்களின் செயலாளர்களும் நிறுவனத் தலைவர்களும் இக்கலந்துரையாடலில் பங்குபற்றினர் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)

# மாணவர்களிடம் நிதி அறவிடாதீர்கள்

## யாழ்.வலய அதிபர்கள், ஆசிரியர்களுக்கு கல்விப் பணிப்பாளர் சந்திரராஜா அறிவுறுத்து

(யாழ்ப்பாணம்)

இன்றைய சூழ்நிலையில் யாழ்.வலயத்திற்குட்பட்ட அதிபர்களோ, ஆசிரியர்களோ எந்தவொரு சந்தர்ப்பத்திலும் மாணவர்களிடம் நிதி எதனையும் எந்த வகையிலும் அறவிடாதிருக்குமாறு யாழ்.வலயக் கல்விப் பணிப்பாளர் செ.சந்திரராஜா அறிவுறுத்தினார்.

இது தொடர்பில் அவர் விடுத்துள்ள செய்திக் குறிப்பில்,

கொவிட் 19 (Covid-19) பாதிப்புக் காரணமாகப் பாடசாலைகள் மூடப்பட்டுள்ள நிலையில் தரம் 5, தரம் 11, தரம் 13 மாணவர்களின் 2020 பரீட்சைகளை அடிப்படையாகக் கொண்டு வலய மட்டத்தில் வேலைத்திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டு நடைமுறைப் படுத்தப்படவுள்ளன.

1. தரம் 5 மாணவர்களின் பரீட்சையை மையமாகக் கொண்டு மாணவர்களுக்கான கற்றல் கையேடுகள் தயாரிக்கப்பட்டுள்ளன. இரண்டு வாரங்களுக்குள் இவை அந்தந்தப் பாடசாலை அதிபர்களுக்கு உதவிக்கல்விப் பணிப்பாளர் ஊடாக அனுப்பி வைக்கப்படும்.

2. தரம் 13 மாணவர்களுக்கான விசேட செயற்றிட்டத்துக்கான கையேடுகள் ஏற்கனவே பாடசாலைகளுக்கு .வழங்கப்பட்டுள்ளன. தற்போதைய சூழ்நிலையைக் கருத்திற்கொண்டு இவற்றை உரியவாறு மாணவர்களுக்குச் சேர்ப்பிப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளவும்.

3. தரம் 11 வகுப்பு மாணவர்களுக்கு பரீட்சையை இலக்காக வைத்து கையேடுகள் தயாரிக்கப்பட்டு மே மாத இறுதியில் வழங்கப்படவுள்ளன. இதற்கான செலவீனத்தைப் பாடசாலைகள் தங்களுக்கு வழங்கப்பட்ட பல்வேறு நிதி மூலங்களிலிருந்தும் பெற்றுக் கொள்வதற்கான அனுமதி அதிபர்களுக்கு வழங்கப்படும். இது தொடர்பில் உரியவாறு அதிபர்கள் முன்கூட்டியே செயற்படுவது அவசியமாகும்.

4. பாடசாலைகள் பரீட்சை வழிகாட்டிகளையோ அல்லது வேறு எந்தவொரு கையேடுகளையோ மாணவர்களிடம் நிதி அறவீடு செய்து வழங்குதலாகாது. ஆசிரியர்களும் தனிப்பட்ட முறையில் தற்போதைய சூழ்நிலையில் இவ்வாறு விற்பனை செய்யக்கூடாது. எந்தவொரு சந்தர்ப்பத்திலும் யாழ்.வலயத்துக்குட்பட்ட அதிபர்களோ ஆசிரியர்களோ இன்றைய சூழ்நிலையில் மாணவர்களிடம் நிதி எதனையும் எந்தவகையிலும் அறவிடாதிருக்குமாறு மீண்டும் வலியுறுத்துகின்றேன் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-3-5)

# இரு குழுக்களுக்கிடையில் மோதல்; துப்பாக்கியுடன் இளைஞன் கைது



(சம்மாந்துறை)

சம்மாந்துறையில் இரண்டு குழுக்களுக்கிடையில் மதுபோதையில் இடம்பெற்ற பிரச்சினையின் போது துப்பாக்கிச் சூடு நடத்திய சந்தேக நபர் ரி-56 ரக துப்பாக்கியுடன் கைதானார்.

இச்சம்பவம் சம்மாந்துறை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட செந்நெல் கிராமத்தில் கடந்த 20 ஆம் திகதி இரவு 9.30 மணியளவில் இடம்பெற்றதாக பொலிஸாருக்கு முறைப்பாடு கிடைக்கப்பெற்றது.

இந்நிலையில், கிழக்கு மாகாண சிரேஷ்ட பொலிஸ்மா அதிபர் நிலந்த ஜெயவர்த்தனவின் கட்டளைக்கமைய அம்பாறை மாவட்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் அயாஷ கருணாரத்தினவின் மேற்பார்வையில் அம்பாறை மாவட்ட பொலிஸ் அத்தியட்சகர் எம்.ஜெயந்த ரத்நாயக்க நெறிப்படுத்தலில் கல்முனை பிராந்திய பொலிஸ் அத்தியட்சகர் புத்திக்க ஜெயசுந்தரவின் நேரடிக் கண்காணிப்பில் சம்மாந்துறை பொலிஸ் நிலைய் பொறுப்பதிகாரி கே.டி.எஸ்.ஜயலத் தலைமையில் சம்மாந்துறை பொலிஸ் நிலைய குற்றப்புலனாய்வுப் பொறுப்பதிகாரி விஜயராஜா குழுவினர் துப்பாக்கிச்சூடு இடம்பெற்று 24 மணித்தியாலங்களுக்குள் 26 வயதுடைய சந்தேக நபரையும் துப்பாக்கிச்சூட்டை மேற்கொண்டு மறைத்து வைத்திருந்த ரி-56 ரக துப்பாக்கிச் மற்றும் 9 ரவையுடன் கூடிய ரவைக்கூட்டையும் மீட்டனர்.

குறித்த சம்பவத்தின் போது இரு துப்பாக்கி வேட்டுக்களை சந்தேக நபர் தீர்த்துள்ளதாக பொலிஸாரின் விசாரணையில் இருந்து தெரிய வந்தது.

மேலும் சந்தேக நபரை சம்மாந்துறை நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டதாக சம்மாந்துறை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி தெரிவித்தார். (இ-7)

# கட்டுநாயக்கவில் பணியாற்றிய பெண்ணிடமிருந்து மற்றுமொருவருக்கு கொரோனா தொற்று

(வரக்காபொல)

வரக்காபொல பிரதேசத்தில் இனங்காணப்பட்ட கொரோனா தொற்றாளர், கட்டுநாயக்க விமான நிலையத்தில் பணியாற்றிய கொரோனா தொற்றுக்குள்ளான பெண் தங்கியிருந்த வீட்டைச் சேர்ந்தவர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இதனையடுத்து. வரக்காபொல பகுதியில் இனங்காணப்பட்ட தொற்றாளர் நேற்று முன்தினம் இரவு ஐ.டீ.எச். வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டார்.

கட்டுநாயக்க விமான நிலையத்தில் பணியாற்றிய குறித்த பெண் தங்கியிருந்த வீட்டார் தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்ட நிலையிலேயே, குறித்த நபர் இனங்காணப்பட்டார்.

மேலும் இருவர் பி.சி.ஆர். சோதனைக்கு உட்படுத்தப்பட்டனர். (இ-7)

## அமெரிக்காவை அச்சுறுத்தும் கொரோனா

# ஒரே நாளில் 2 ஆயிரத்து 800 பேர் பலி
# 45 ஆயிரத்தைத் தாண்டியது மரணம்

(நியூயோர்க்)
அமெரிக்காவில் கொரோனா வைரஸ் தொற்றால் நேற்று முன் தினம் ஒரே நாளில் 2 ஆயிரத்து 802 பேர் உயிரிழந்தனர். இதனால் அங்கு வைரஸ் தாக்குதலுக்கு பலியானோர் எண்ணிக்கை 45 ஆயிரத்தைத் தாண்டியது.

உலகம் முழுவதும் 210 நாடுகளுக்கு கொரோனா வைரஸ் பரவியது. இதற்குதடுப்பு மருந்து கண்டுபிடிக்க விஞ்ஞானிகள் தீவிர முயற்சி மேற்கொண்டு வரும் நிலையில் வைரஸ் தாக்குதலின் தாக்கம் நாளுக்கு நாள் அதிகரித்துக்கொண்டே வருகிறது.

நேற்றுக்காலை நிலவரப்படி, 25 இலட்சத்து 56 ஆயிரத்து 421 பேருக்கு வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டது. இந்த வைரஸின் கோரத்தாக்குதலுக்கு உலகம் முழுவதும் இதுவரை ஒரு இலட்சத்து 77 ஆயிரத்து 439 பேர் உயிரிழந்தனர்.

இதற்கிடையில், சீனாவில் கண்டுபிடிக்கப்பட்ட கொரோனா வைரஸ் ஐரோப்பிய நாடுகளை தொடர்ந்து தற்போது அமெரிக்காவில் கோரத்தாண்டவமாடி வருகிறது.



வைரஸ் பரவியவர்கள் மற்றும் பலி எண்ணிக்கையில் உலகளவில் அமெரிக்கா முதலிடத்தில் உள்ளது.

இந்நிலையில், அமெரிக்காவில் கொரோனாவால் உயிரிழந்தோர் எண்ணிக்கை 45 ஆயிரத்தைத் தாண்டியது.

இந்நிலையில் நேற்றுக் காலை நிலவரப்படி, அந்நாட்டில் 8 இலட்சத்து 19 ஆயிரத்து 805 பேருக்கு வைரஸ் பரவியது.

குறிப்பாக நேற்று முன்தினம் ஒரே நாளில் புதிதாக 27 ஆயிரத்து 46 பேருக்கு வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டது.

மேலும், அங்கு வைரஸ் தாக்குதலுக்கு நேற்று முன்தினம் ஒரே நாளில் 2 ஆயிரத்து 802 பேர் பலியாகினர்.

இதனால் அமெரிக்காவில் கொரோனாவால் உயிரிழந்தோர் எண்ணிக்கை 45 ஆயிரத்து 316 ஆக அதிகரித்தது குறிப்பிடத்தக்கது. (இ-2)

**வாடகைக்கு வீடு தேவை**

நல்லூர், கல்வியங்காடு சூழலில் அலுவலகம் ஒன்றிற்கு, வீடு வாடகைக்கு தேவை.

தொடர்புகளுக்கு:
077 331 4262
(2657)

**தேவை**

முல்லைத்தீவுப் பகுதியில் தோட்டமொன்றின் காவலுக்கு ஆள் தேவை. தோட்டங்களில் தனியாளாக வேலை செய்து பழக்கம் உள்ளவர்கள் விரும்பத்தக்கது. சம்பளம் காவலுக்கு மட்டும் மாதத்துக்கு ரூபா 12,000. மேலதிக வேலைகளுக்கு வேலைக்கேற்ற சம்பளம் வழங்கப்படும். குடும்பமாகத் தங்குவதற்கான வசதி உண்டு. தேசிய அடையாள அட்டை, கிராம சேவையாளரின் அத்தாட்சிக்கடிதம், மேலதிக சிபாரிசுகள் தேவை.

தொலைபேசி: (9526)
077 168 1697 / 077 113 3667

## இந்தியாவில் கொரோனா ஆதிக்கம்
# பாதிப்பு 20 ஆயிரத்தை எட்டியது
# உயிரிழப்பு 640 ஆக உயர்ந்தது!

(டில்லி)
இந்தியாவில் கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டவர்களின் எண்ணிக்கை 20 ஆயிரத்தை நெருங்கியது. இதேவேளை வைரஸ் தொற்றால் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 640 ஆக உயர்ந்தது.

இந்தியாவில் கொரோனா வைரஸ் பாதித்தவர்களின் எண்ணிக்கை தொடர்ந்து அதிகரித்த வண்ணமுள்ளது. சமூகத் தொற்று ஏற்படுவதைத் தவிர்க்க ஊரடங்கு உத்தரவு, நோய் அறிகுறி உள்ளவர்களை தனிமைப்படுத்தி கண்காணித்தல் உள்ளிட்ட பல்வேறு முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

பரிசோதனைகளும் தற்போது அதிகரிக்கப்பட்ட நிலையில், வைரஸ் தொற்று உறுதி செய்யப்படுவோரின் எண்ணிக்கையும் உயர்ந்து வருகிறது.

இந்நிலையில் மத்திய சுகாதாரத்துறை நேற்று வெளியிட்ட தகவலின்படி, இந்தியாவில் கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டவர்களின் எண்ணிக்கை 19 ஆயிரத்து 984 ஆக உயர்ந்தது.

நேற்று முன்தினம் மட்டும் 1383 பேருக்கு நோய்த்தொற்று உறுதி செய்யப்பட்டது. 50 பேர் உயிரிழந்தனர். இதன் மூலம் கொரோனா வைரஸால் உயிரிழந்தோர் எண்ணிக்கை 640 ஆக உயர்ந்தது. இதுவரை 3870 பேர் குணமடைந்தனர்.

மகாராஷ்டிரா மாநிலத்தில் அதிகளவாக 5 ஆயிரத்து 218 பேருக்குக் கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டது. 251 பேர் உயிரிழந்தனர். தலைநகர் டில்லியில் 2156 பேருக்கு நோய்த்தொற்று உறுதி செய்யப்பட்டது. 47 பேர் உயிரிழந்துள்ளனர். தமிழகத்தில் 1596 பேருக்குக் கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்ட நிலையில், 18 பேர் உயிரிழந்தமை குறிப்பிடத்தக்கது. (இ-2)

**பெயர் மாற்றம்**

கோட்டைக்காடு மல்லாகத்தை வசிப்பிடமாகக் கொண்ட துரைராசா தேவராசா ஆகிய எனது பெயர் துரை தேவதாசா என தவறுதலாகப் பதியப்பட்டுள்ளது. எனவே இன்று முதல் என்சார்ந்த சகல ஆவணங்களிலும் துரைராசா தேவராசா எனும் பெயரையே பயன்படுத்துவேன் என இத்தால் அனைவருக்கும் அறியத் தருகின்றேன்.

உண்மையுள்ள
துரைராசா தேவராசா
(2656)

**கூட்டுறவு வைத்தியசாலைச் சங்கம் (வ-து), மூளாய்**
**பதவி வெற்றிடங்கள்**

எமது வைத்தியசாலைக்கு பின்வரும் பதவிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றது.

1. தாதிய உத்தியோகத்தர்
2. தாதி பயிற்சியாளர்
3. முதியோர் பராமரிப்பாளர்
4. ஆய்வுகூட தொழில்நுட்பவியலாளர்
5. ஆய்வுகூட தொழில்நுட்ப உதவியாளர் பயிலுநர்

ஆர்வமுள்ளவர்கள் தகுதிச் சான்றிதழ்களுடன் எதிர்வரும் 26.04.2020 அன்று 9.00 மணிக்கு வைத்தியசாலைக்கு சமுகம் தர முடியுமானவர்கள் சமுகம் தரவும். சமுகம் தர முடியாதவர்கள் மின் அஞ்சல் மற்றும் தொலைபேசியூடாக தொடர்பு கொள்ளவும்.

அருகாமையில் உள்ளவர்கள் விரும்பத்தக்கது.

தலைவர்:
கூட்டுறவு வைத்தியசாலைச் சங்கம் (வ-து),
மூளாய்.

தொலைபேசி இல-021 225 0441 , 077 961 4811
(9.00am-4.30p.m)
மின் அஞ்சல் முகவரி: Moolaii@Yahoo.com
(9518)

# இங்கிலாந்தில் கொரோனாவால் பலி 17 ஆயிரத்தைக் கடந்தது



(லண்டன்)
இங்கிலாந்தில் கொரோனா வைரஸ் தொற்றால் நேற்று முன் தினம் ஒரே நாளில் 823 பேர் உயிரிழந்தனர். இதனால் அங்கு பலியானோர் எண்ணிக்கை 17 ஆயிரத்தைக் கடந்தது.

உலகம் முழுவதும் 210 நாடுகளில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ள கொரோனா வைரஸால் நேற்றுக்காலை 9 மணி நிலவரப்படி 25 இலட்சத்து 52 ஆயிரம் பேருக்கு மேற்பட்டவர்கள் பாதிக்கப்பட்டனர்.

இந்த வைரஸால் பாதிக்கப்பட்டவர்களில் 16 இலட்சத்து 86 ஆயிரம் பேருக்கு மேற்பட்டவர்கள் சிகிச்சை பெற்று வருகின்றனர். சிகிச்சை பெற்று வருபவர்களில் 57 ஆயிரத்து 254 பேரின் நிலைமை மிகவும் கவலைக்கிடமாகவுள்ளது.

வைரஸ் பரவியவர்களில் 6 இலட்சத்து 88 ஆயிரத்து 430 பேர் சிகிச்சைக்குப் பின் குணமடைந்துள்ளனர். ஒரு இலட்சத்து 77 ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் பலியாகினர்.

சீனாவில் கண்டுபிடிக்கப்பட்ட கொரோனா வைரஸ் தற்போது அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய நாடுகளைப் புரட்டியெடுத்து வருகிறது.

ஐரோப்பிய நாடுகளில் இத்தாலி, ஸ்பெயின், பிரான்ஸுக்கு அடுத்தபடியாக வைரஸ் இங்கிலாந்தில் நிலை கொண்டுள்ளது.

அந்நாட்டில் ஒரு இலட்சத்து 29 ஆயிரத்திற்கும் மேற்பட்டோருக்கு வைரஸ் பரவியுள்ளது.- குறிப்பாக நேற்று முன்தினம் ஒரே நாளில் புதிதாக 4 ஆயிரத்து 301 பேருக்கு வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டது.

மேலும், அந்நாட்டில் வைரஸ் தாக்குதலுக்கு நேற்று முன்தினம் ஒரே நாளில் 828 பேர் பலியாகினர். இதனால் இங்கிலாந்தில் கொரோனாவால் உயிரிழந்தோர் எண்ணிக்கை 17 ஆயிரத்து 337 ஆக அதிகரித்தது. (இ-2)

# புத்தாண்டு இராசி பலன்கள்

## 14.03.2020-13.04.2021



சார்வரி வருடத் தொடக்கத்தில் உங்கள் இராசிநாதன் சுக்கிரன் அஷ்டம ஸ்தானத்தில் சொந்த வீட்டில் பலம்பெற்று சஞ்சரிக்கிறார். சகாய ஸ்தானத்தில் சனி, சந்திரன், கேது ஆகிய கிரகங்கள் இணைந்திருக்கின்றன. குருவும் செவ்வாயும் இணைந்து அர்த்தாஷ்டம ஸ்தானத்தில் உள்ளனர். புதன் நீச்சம் பெற்றும் சூரியன் பலம் பெற்றும் உலவும் அமைப்பில் ஆண்டு பிறக்கிறது. எனவே உதிரி வருமானங்கள் வரும். அரசியல் ஈடுபாடு கொண்டவர்களுக்கு அதிகாரப்பதவிகள் கிடைக்கும்.

இராகு - கேது பெயர்ச்சி


1.9.2020 அன்று 2 ஆம் இடத்திற்கு கேதுவும் 8 ஆம் இடத்திற்கு இராகுவும் பெயர்ச்சியாகிறார்கள். அந்த வகையில் உங்களுக்கு சுப விரயங்கள் அதிகரிக்கும். எதிர்பாராத விதத்தில் இடமாற்றம் ஊர்மாற்றங்கள் வந்து சேரும். வெளிநாடு செல்பவர்களுக்கு தடை ஏற்பட்டு அகலும். எந்தக் காரியத்தையும் செய்யத் தொடங்கும் பொழுது கையில் பணத்தை வைத்துக் கொண்டு செய்ய இயலாது. ஆலய வழிபாட்டில் அதிக ஆர்வம் காட்டுவீர்கள். குலதெய்வ பிரார்த்தனைகளை நிறைவேற்றும் எண்ணம் உருவாகும்.

குருப்பெயர்ச்சி

15.11.2020 அன்று குரு பகவான் மகர இராசிக்கு பெயர்ச்சியாகிறார். அது குருவுக்கு நீச்ச வீடாகும். உங்கள் இராசிநாதன் சுக்கிரனுக்கு குரு பகை கிரகம் என்பதால் நீச்சம் பெறுவது ஒரு வழிக்கு நன்மைதான். சகாய ஸ்தானாதிபதியாக குரு சஞ்சரிப்பதால், சில எதிர்பார்ப்புகள் நிறைவேறுவதில் தாமதங்கள் ஏற்படும். உத்தியோகத்தில் சக ஊழியர்களால் பிரச்சினைகள் ஏற்படும். வெளிநாட்டில் இருந்து சொந்த ஊருக்கு திரும்ப வழிபிறக்கும். புதிய ஒப்பந்தங்கள் வந்து சேரும். ஆற்றல் மிக்கவர்களும் அரசியல் வாதிகளும் உங்களுக்கு பின்னணியாக இருந்து கேட்ட உதவிகளை செய்து கொடுப்பர். பயணங்கள் அதிகரிக்கும். ஓய்வின்றி உழைக்கும் நேரம் இது.

சனிப்பெயர்ச்சி

26.12.2020 அன்று வாக்கிய பஞ்சாங்க ரீதியாக சனி பகவான் மகர இராசிக்கு பெயர்ச்சியாகிறார். இந்த பெயர்ச் சியும் அர்த்தாஷ்டம சனியாக அமைகிறது. சுக ஸ்தானத்தில் சனி சஞ்சரிக்கும் போது சுகக் கேடுகளையும் குடும்பப் பிரச்சினைகளையும் கொடுக்கத்தான் செய்யும். அர்த்தாஷ்டமச் சனியின் ஆதிக்க காலத்தில் பிறருக்கு பணப் பொறுப்புச் சொல்லி கொடுக்கும் தொகையால் பிரச்சினைகள் ஏற்படும். நீடித்த நட்புக்கூட பகையாகலாம். புதுமுகங்களை நம்பி செயற்படுவதாலும் விரயங்கள் ஏற்படலாம்.




குரு வக்கிரமும் அதிசாரமும்

13.5.2020 முதல் 7.7.2020 வரை மகர இராசியில் குருபகவான் அதிசாரமாகி வக்கிரம் பெறுகிறார். 8.7.2020 முதல் 9.9.2020 வரை தனுசு இராசியில் குரு வக்கிர கதியில் இருக்கிறார். இக்காலத்தில் சனிபகவான் குருவோடு இணைந்து வக்கிர கதியிலேயே தனுசு இராசிக்குள் உலா வருகிறார். மீண்டும் குருபகவான் 6.4.2021 இல் கும்ப இராசிக்கு குரு அதிசாரமாக செல்கிறார். இந்த குருவின் வக்கிர காலத்தில் நல்ல வாய்ப்புகள் வந்து கதவை தட்டும். வளர்ச்சியில் இருந்த தளர்ச்சி அகலும்.

வழிபாடு

பஞ்சமி திதியன்று விரதமிருந்து வராகி அம்மனை வழிபட்டு வந்தால் எதிர்காலம் இனிமையானதாக அமையும்.

பெண்களுக்கான சிறப்புப் பலன்கள்

புத்தாண்டின் தொடக்கத்தில் பொருளாதார நிலை உயரும். தடைபட்ட காரியங்கள் தானாக நடைபெறும். கணவன் - மனைவிக்குள் இணக்கம் ஏற்படும். அர்த்தாஷ்டம குருவும் அர்த்தாஷ்டமச் சனியின் ஆதிக்கமும் இந்த ஆண்டு வருவதால், அதன் பிறகு செய்யும் முயற்சிகளில் அவசரம் காட்ட வேண்டாம். எதிலும் ஆலோசித்து முடிவெடுப்பதே நல்லது. அனுபவம் வாய்ந்தவர்களின் ஆலோசனைகள் தக்க சமயத்தில் கைகொடுக்கும்.

**ஜோதிடக் கலாமணி சிவல்புரி சிங்காரம்**



சார்வரி வருடத் தொடக்கத்தில், உங்கள் இராசிநாதன் சுக்கிரன் அஷ்டம ஸ்தானத்தில் சொந்த வீட்டில் பலம்பெற்று சஞ்சரிக்கிறார். சகாய ஸ்தானத்தில் சனி, சந்திரன், கேது ஆகிய கிரகங்கள் இணைந்திருக்கின்றன. குருவும் செவ்வாயும் இணைந்து அர்த்தாஷ்டம ஸ்தானத்தில் உள்ளனர். புதன் நீச்சம் பெற்றும் சூரியன் பலம் பெற்றும் உலவும் அமைப்பில் ஆண்டு பிறக்கிறது. எனவே உதிரி வருமானங்கள் வரும். அரசியல் ஈடுபாடு கொண்டவர்களுக்கு அதிகாரப்பதவிகள் கிடைக்கும்.

இராகு - கேது பெயர்ச்சி

சார்வரி வருடத் தொடக்கத்தில் உங்கள் இராசிநாதன் சுக்கிரன் அஷ்டம ஸ்தானத்தில் சொந்த வீட்டில் பலம் பெற்று சஞ்சரிக்கிறார். சகாய ஸ்தானத்தில் சனி, சந்திரன், கேது ஆகிய கிரகங்கள் இணைந்திருக்கின்றன. குருவும் செவ்வாயும் இணைந்து அர்த்தாஷ்டம ஸ்தானத்தில் உள்ளனர். புதன் நீச்சம் பெற்றும், சூரியன் பலம் பெற்றும் உலவும் அமைப்பில் ஆண்டு பிறக்கிறது. எனவே உதிரி வருமானங்கள் வரும். அரசியல் ஈடுபாடு கொண்டவர்களுக்கு அதிகாரப் பதவிகள் கிடைக்கும்.

இராகு - கேது பெயர்ச்சி

1.9.2020 அன்று 2 ஆம் இடத்திற்கு கேதுவும் 8 ஆம் இடத்திற்கு இராகுவும் பெயர்ச்சியாகிறார்கள். அந்த வகையில் உங்களுக்கு சுப விரயங்கள் அதிகரிக்கும். எதிர்பாராத விதத்தில் இடமாற்றம், ஊர் மாற்றங்கள் வந்து சேரும். வெளிநாடு செல்பவர்களுக்கு தடை ஏற்பட்டு அகலும். எந்தக் காரியத்தையும் செய்யத் தொடங்கும் பொழுது கையில் பணத்தை வைத்துக் கொண்டு செய்ய இயலாது. ஆலய வழிபாட்டில் அதிக ஆர்வம் காட்டுவீர்கள். குலதெய்வ பிரார்த்தனைகளை நிறைவேற்றும் எண்ணம் உருவாகும்.

குருப்பெயர்ச்சி

15.11.2020 அன்று குருபகவான், மகர இராசிக்கு பெயர்ச்சியாகிறார். அது குருவுக்கு நீச்ச வீடாகும். உங்கள் இராசிநாதன் சுக்கிரனுக்கு குரு பகை கிரகம் என்பதால், நீச்சம் பெறுவது ஒரு வழிக்கு நன்மை தான். சகாய ஸ்தானாதிபதியாக குரு சஞ்சரிப்பதால், சில எதிர்பார்ப்புகள் நிறைவேறுவதில் தாமதங்கள் ஏற்படும். உத்தியோகத்தில் சக ஊழியர்களால் பிரச்சினைகள் ஏற்படும். வெளிநாட்டில் இருந்து சொந்த ஊருக்கு திரும்ப வழி பிறக்கும். புதிய ஒப்பந்தங்கள் வந்து சேரும். ஆற்றல் மிக்கவர்களும் அரசியல் வாதிகளும் உங்களுக்கு பின்னணியாக இருந்து கேட்ட உதவிகளைச் செய்து கொடுப்பர். பயணங்கள் அதிகரிக்கும். ஓய்வின்றி உழைக்கும் நேரம் இது.

சனிப்பெயர்ச்சி

26.12.2020 அன்று வாக்கிய பஞ்சாங்க ரீதியாக சனி பகவான், மகர இராசிக்கு பெயர்ச்சியாகிறார். இந்த பெயர்ச்சியும் அர்த்தாஷ்டம சனியாக அமைகிறது. சுக ஸ்தானத்தில் சனி சஞ்சரிக்கும்போது சுகக் கேடுகளையும் குடும்பப் பிரச்சினைகளையும் கொடுக்கத்தான் செய்யும். அர்த்தாஷ்டமச் சனியின் ஆதிக்க காலத்தில் பிறருக்கு பணப் பொறுப்பு சொல்லி கொடுக்கும் தொகையால் பிரச்சினைகள் ஏற்படும். நீடித்த நட்பு கூட பகையாகலாம். புதுமுகங்களை நம்பி செயற்படுவதாலும் விரயங்கள் ஏற்படலாம்.




குரு வக்கிரமும் அதிசாரமும்

13.5.2020 முதல் 7.7.2020 வரை மகர இராசியில் குருபகவான் அதிசாரமாகி வக்கிரம் பெறுகிறார். 8.7.2020 முதல் 9.9.2020 வரை தனுசு இராசியில் குரு வக்கிர கதியில் இருக்கிறார். இக்காலத்தில் சனிபகவான் குருவோடு இணைந்து வக்கிர கதியிலேயே தனுசு இராசிக்குள் உலா வருகிறார். மீண்டும் குருபகவான் 6.4.2021 இல் கும்ப இராசிக்கு குரு அதிசாரமாக செல்கிறார். இந்த குருவின் வக்கிர காலத்தில் நல்ல வாய்ப்புகள் வந்து கதவை தட்டும். வளர்ச்சியில் இருந்த தளர்ச்சி அகலும்.

வழிபாடு

பஞ்சமி திதியன்று விரதமிருந்து வராகி அம்மனை வழிபட்டு வந்தால் எதிர்காலம் இனிமையானதாக அமையும்.

பெண்களுக்கான சிறப்புப் பலன்கள்

புத்தாண்டின் தொடக்கத்தில் பொருளாதார நிலை உயரும். தடைப்பட்ட காரியங்கள் தானாக நடைபெறும். கணவன் - மனைவிக்குள் இணக்கம் ஏற்படும். அர்த்தாஷ்டம குருவும் அர்த்தாஷ்டமச்சனியின் ஆதிக்கமும் இந்த ஆண்டு வருவதால், அதன் பிறகு செய்யும் முயற்சிகளில் அவசரம் காட்ட வேண்டாம். எதிலும் ஆலோசித்து முடிவெடுப்பதே நல்லது. அனுபவம் வாய்ந்தவர்களின் ஆலோசனைகள் தக்க சமயத்தில் கை கொடுக்கும். 1.9.2020 அன்று 2 ஆம் இடத்திற்கு கேதுவும் 8 ஆம் இடத்திற்கு இராகுவும் பெயர்ச்சியாகிறார்கள். அந்த வகையில் உங்களுக்கு சுப விரயங்கள் அதிகரிக்கும். எதிர்பாராத விதத்தில் இடமாற்றம், ஊர்மாற்றங்கள் வந்து சேரும். வெளிநாடு செல்பவர்களுக்கு தடை ஏற்பட்டு அகலும். எந்த காரியத்தையும், செய்யத்தொடங்கும் பொழுது கையில் பணத்தை வைத்துக் கொண்டு செய்ய இயலாது. ஆலய வழிபாட்டில் அதிக ஆர்வம் காட்டுவீர்கள். குலதெய்வ பிரார்த்தனைகளை நிறைவேற்றும் எண்ணம் உருவாகும்.

(தொடரும்)

### கொரோனாவால் கொட்டும் மழைக்குள் வியாபாரம்

# சுன்னாகம் சந்தை வியாபாரிகளின் அவலநிலை!






(யாழ்ப்பாணம்)

வலிகாமம் தெற்குப் பிரதேச சபைக்குட்பட்ட சுன்னாகம் மத்திய சந்தை கொரோனாத் தாக்கத்தின் எதிரொலியாக சந்தை வளாகத்தில் இயங்க அனுமதிக் கப்படவில்லை.

இந்நிலையில் ஊரடங்குத் தளர்வின் பின் வியாபாரிகளுக்குப் பிரதேச சபை உரிய வசதிகள் எதுவும் செய்து கொடுக்காத நிலையில் வீதியிலும், சந்தைக் கட்டடத் தொகுதிக்கு வெளியிலும், சுன்னாகம் பிரதான பேருந்து நிலையத்திற்கு முன்பாகவும் மேற்படி சந்தை வியாபாரிகள் பெரும் சிரமத்தின் மத்தியில் வியாபார நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

நேற்று முன்தினம் பிற்பகல் பெய்த கடும் மழையால் வியாபாரிகள் பெரும் சிரமங்களை எதிர்கொண்டனர். (இ-18)

# தேர்தல் நடத்துவதற்கான திகதியை மீள் பரிசீலனை செய்ய வேண்டும்

## அகிலவிராஜ் கோரிக்கை



(கொழும்பு)

பொதுத்தேர்தல் நடத்துவதற்கான திகதியை மீள் பரிசீலனை செய்ய வேண்டும் என ஐக்கிய தேசியக் கட்சியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் அகிலவிராஜ் காரியவசம் தெரிவித்தார்.

பொதுத் தேர்தலுக்கான திகதி அறிவிக்கப்பட்ட நிலையில், நேற்று முன்தினம் அரசியல் கட்சி முக்கியஸ்தர்களுடன் தேர்தல்கள் ஆணைக்குழுத் தலைவர் விசேட கலந்துரையாடல் ஒன்றில் ஈடுபட்டார்.

இந்நிலையில் குறித்த கலந்துரையாடலின் நிறைவில் ஊடகங்களுக்கு கருத்து வெளியிடும் போதே அகிலவிராஜ் காரியவசம் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

"தேர்தல்கள் ஆணைக்குழுத் தலைவர், தன்னால் இந்தச் சந்தர்ப்பத்தில் எந்தவொரு செயற்பாட்டையும் மேற்கொள்ள முடியாது என்பதால்தான் தேர்தல் திகதியை அறிவித்துள்ளார்.

இந்நிலையில், ஜூன் 2 ஆம் திகதிக்கு முன்னர் அரசமைப்புக்கு இணங்க நாடாளுமன்றைக் கூட்ட முடியாது போனால், இந்த அவசர நிலைமையை உணர்ந்து நாடாளுமன்றை உடனடியாகக் கூட்ட வேண்டும் என்பதுதான் எமது கோரிக்கையாக இருக்கிறது.


அரசமைப்பில் காணப்படும் சிக்கல் நிலைமையைக் கருத்தில் கொண்டு தேர்தல் நடத்துவதற்கான திகதியை பரிசீலனை செய்ய வேண்டும் எனவும் நாம் வலியுறுத்தியுள்ளோம்" என அவர் மேலும் தெரிவித்தார்.(இ-7)

# திரிபோஷா பக்கற்றுக்கள் வீட்டுக்கு வரும்

கர்ப்பிணி தாய்மார்கள் மற்றும் குழந்தைகளுக்கான திரிபோஷா பக்கற்றுக்களை குடும்ப மருத்துவ அதிகாரிகளூடாக உரியவர்களுக்கு பகிர்ந்தளிப்பதற்கான நடவடிக்கைகளை சுகாதார அமைச்சு முன்னெடுத்திருப்பதாக சுகாதார அமைச்சின் செயலாளர் ஜே.எம்.பத்ராணிஜெயவர்த்தன தெரிவித்தார். மேலும், இந்தச் செயற்பாடுகளில் குடும்ப மருத்துவ அதிகாரிகளை ஈடுபடுத்தவுள்ளதாகவும், இந்த திரிபோஷா பக்கற்றுக்களை அவர்கள் வீடுகளுக்கே சென்று வழங்கவுள்ளதாகவும் தெரிவித்தார்.(இ-7)

# facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 2018


**சங்கீ**




காதல் பண்ணிட்டு அழுகிற ஆண்களை விட கல்யாணம் பண்ணிட்டு அழுகிற ஆண்கள் தான் ஊருக்க அதிகம்

**ஜோசப்**

டேய் இந்த கட்டைய வச்சிக்க



எவனாவது பக்கத்துல வந்து இருமினா ஒரே அடியா அடிச்சு மண்டைய பொளந்திடு

**ருஜிதா**

வளந்து பெரிய ஆளாகி நல்ல பேரு வாங்குறதும் பிறக்கும் போதே நல்ல பெயரா வச்சா என்னவாம்




**இந்து**


மனசு சரியில்லன்னு தான் கோவிலுக்கு போறம்



அங்கயும் சக்கரப்பொங்கல் கிடைக்கலன்னா என்ன வாழ்க்கை இது

**ஜாழினி**


சீனாக்காரன் பொருள் எப்பவுமே கொஞ்ச நாள் தாங்காது



ஆனா இந்த கொரோனா மட்டும் எப்பிடி இத்தனை மாசம் தாங்குது

**கோமதி**

ஒரு வழியா ஊரடங்கு தளர்த்திட்டாங்கள்



இப்ப வீட்ட விட்டு எப்பிடி வெளிய போறது

நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

# பொது இடத்தில் துப்பினால் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்

## வவு.நகரசபை தவிசாளர் எச்சரிக்கை

(நெளுக்குளம்)

வவுனியா நகரில் பொது இடங்களில் எச்சில் துப்புபவர்கள் மீது நடவடிக்கை எடுக்கவுள்ளதாக வவுனியா நகரசபை தவிசாளர் இ.கௌதமன் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்.

கொரோனோ வைரஸ் தாக்கம் நாட்டில் அதிகரித்து வருகின்றது. இந்நிலையில் அதனை கட்டுப்படுத்தும் நோக்குடன் பல்வேறு நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகின்றோம்.

அந்தவகையில் மாவட்ட அழகக சங்கம் மற்றும் உணவக உரிமையாளர்களுடன் பல்வேறு விடயங்கள் தொடர்பாக கலந்துரையாடியுள்ளதுடன் சில அறிவுறுத்தல்களையும் விடுத்துள்ளோம்.

குறிப்பாக உணவகங்கள் சுகாதார விடயங்களை கையாளுவது மிகவும் முக்கியம். உணவருந்த வரும் பொது மக்கள் சமூக இடைவெளியை பேணும் நிலை தொடர்பாக அனைத்து உணவகங்களும் கவனம் செலுத்தவேண்டும்.

அத்துடன் நகருக்குட்பட்ட பகுதிகளில் பொது இடங்களில் எச்சில் துப்புபவர்கள் மற்றும் பேருந்துகளில் பயணம் செய்துகொண்டு யன்னல் வழியாக எச்சில் துப்புபவர்கள் மீது கவனம் செலுத்தவுள்ளோம். இவ்வாறான செயற்பாடுகளாலும் கொரோனோ வைரஸ் தாக்கம் ஏற்படுவதற்கான வாய்ப்புக்கள் அதிகம் உள்ளது. எனவே அவர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுப்பது தொடர்பாக ஆராய்ந்து வருகின்றோம். இவ்விடயங்கள் தொடர்பாக இன்று இடம்பெறவுள்ள நகரசபையின் மாதாந்த அமர்வில் ஏனைய உறுப்பினர்களுடனும் கலந்துரையாடி ஒரு தீர்மானம் எடுக்கப்படும் என மேலும் தெரிவித்தார். (9-299)

# உமிக்குள் மறைத்து மரக்கடத்தல்; சாரதி கிளி.பொலிஸாரால் கைது



(தருமபுரம்)

கொக்காவில் பகுதியிலிருந்து ஏ-9 வீதியூடாக யாழ்ப்பாணத்திற்கு ஹன்டர் வாகனத்தில் சட்டவிரோதமாக கொண்டு செல்லப்பட்ட முதிரை மரக்குற்றிகளை கிளிநொச்சி பொலிஸார் மீட்டுள்ளனர்.

முல்லைத்தீவு கொக்காவில் பகுதியிலிருந்து சட்ட விரோதமாக மரக்குற்றிகளை கடத்திய வாகனம் யாழ்ப்பாணம் நோக்கி வருவதாக பொலிஸாருக்கு கிடைத்த இரகசிய தகவலையடுத்து கிளிநொச்சி வைத்தியசாலை முன்பாக குறித்த வாகனத்தை மறித்து பொலிஸார் சோதனை செய்துள்ளனர்.

குறித்த வாகனத்தில் உமி மூடைகளை முன்பக்கத்தில் மறைத்து முதிரை மரக்குற்றிகள் கடத்தப்பட்டதை கண்டு பிடித்த பொலிஸார் வாகனத்தையும் சாரதியையும் கைது செய்தனர். மேலதிக நடவடிக்கைகளை பொலிஸார் முன்னெடுத்துள்ளனர். (9-316)

# மன். மனித உரிமை ஆணைக்குழுவின் செயற்பாடுகள் மீண்டும் ஆரம்பம்




(மன்னார்)

கொரோனா அச்சம் காரணமாக தற்காலிகமாக சேவையை இடை நிறுத்தியிருந்த மன்னார் மனித உரிமை ஆணைக்குழுவின் உப காரியாலயத்தின் செயற்பாடுகள் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

உப காரியாலயத்திற்கு என முறைப்பாடுகள் செய்ய வரும் மக்கள் அநாவசியமாக அதிகளவானவர்களை அழைத்து வருவது தடை செய்யப்பட்டுள்ளதுடன் முறைப்பாடுகளுடன் சம்பந்தப்பட்ட நபர்கள் மாத்திரமே வருகை தரவும் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

அதேநேரத்தில் காரியாலயத்திற்கு வருகை தருபவர்கள் அரசினுடைய அறிவுத்திறனை பின்பற்றி சமூக இடைவெளியை பின்பற்றுமாறும் முகக் கவசங்கள் அணிந்துவருவது கட்டாயம் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது

மேலும் அத்தியாவசியமற்ற சந்தர்ப்பங்களில் இயலுமானவரை தங்களுடைய முறைப்பாடுகளை 023 312 3906 என்ற தொலைபேசி இலக்கத்தின் ஊடாக அழைத்து முறைப்பாடுகளை பதிவு செய்ய முடியும் எனவும் அதே நேரத்தில் hrcmannarsub@gmail.com வழியாகவும் தங்களுடைய முறைப்பாடுகளை சமர்ப்பிக்க முடியும் என மன்னார் மாவட்ட உப காரியாலயத்தின் பொறுப்பதிகாரி சட்டத்தரணி வசந்தராஜா தெரிவித்துள்ளார். (9-285)

# தேவாலயங்களுக்கு இராணுவ பாதுகாப்பு



(நெளுக்குளம்)

வவுனியாவில் உள்ள கிறிஸ்தவ தேவாலயங்களுக்கு இராணுவ பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளது. வவுனியா இறம்பைக்குளம் அந்தோனி யார் ஆலயத்தில் இராணுவம் மற்றும் பொலிஸார் பாதுகாப்பு கடமையில் ஈடுபட்டுள் ளதுடன் ஏனைய கிறிஸ்தவ தேவாலயங்களில் இராணுவ பாதுகாப்பும் வழங்கப்பட்டுள்ளது.

உயிர்த்த ஞாயிறு குண்டுத் தாக்குதலின் முதலாம் ஆண்டு நினைவு நாளான நேற்று தேவாலயங்களில் வழிபாடுகள் இடம் பெற்று வந்த நிலையிலேயே இப் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (9-299)

# உயிரிழந்தவர்களுக்கு அஞ்சலி



(நெளுக்குளம்)

உயிர்த்த ஞாயிறு குண்டுத் தாக்குதலில் உயிரிழந்தவர்களுக்கும் தற்போது உலகை அச்சுறுத்தலுக்குள்ளாக்கியுள்ள கொரோனா வைரஸ் தொற்றினால் உயிரிழந் தவர்களுக்குமான அஞ்சலி நிகழ்வு வவுனியா தெற்கு தமிழ் பிரதேச சபை மண்டபத்தில் நேற்று இடம்பெற்றது.

வவுனியா தெற்கு தமிழ் பிரதேச சபையின் மாதாந்த அமர்வு நெளுக்குளத்தில் அமைந்துள்ள சபையின் அலுவலகத்தில் தவி சாளர் து.நடராஜசிங்கம் தலைமையில் நேற்று இடம்பெற்றது.

இதன்போது சபை அமர்வு ஆரம்பிப்பதற்கு முன்னர் அனைத்து உறுப்பினர்களும் எழுந்து நின்று மௌனஅஞ்சலி செலுத்தியதுடன், உயிரிழந்தவர்களின் நினைவாக மெழுகுவர்த்தி ஏற்றி அஞ்சலி செலுத்தியிருந்தனர். (9-299)

# முல்லை.சதொசவிலுள்ள குறைபாடுகளை சீரமைக்குமாறு பொதுமக்கள் கோரிக்கை

(பனிக்கன்குளம்)

முல்லைத்தீவு கரைதுறைப்பற்று பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட முல்லைத்தீவு மாவட்ட வைத்தியசாலைக்கு (மாஞ்சோலை) முன்பாக அமைந்துள்ள லங்கா சதொச நிறுவனத்தில் காணப்படும் குறைபாடுகளை மிக விரைவாக நிவர்த்தி செய்யுமாறு மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

குறித்த லங்கா சதொச நிறுவனத்தின் கட்டடத்துக்குள் பத்து நிமிடங்கள் கூட நின்று பொருட்களை வாங்குவதற்கு முடியாத அளவு வெப்பமான சூழல் காணப்படுவதாகவும் இந்த வெப்பம் காரணமாக அங்குள்ள சில பொருட்கள் பழுதடைவதாகவும் ஏற்கனவே.பழுதடைந்த சம்பவங்கள் இடம்பெற்றிருப்பதாகவும் தெரிவித்த மக்கள் குறித்த விற்பனை நிலையத்தினை சீரமைக்குமாறு தெரிவித்தனர்.

இதேவேளை அண்மைய சூழலிலே லங்கா சதொச ஊழியர்கள் மிகவும் வெப்பமான இந்தக் கட்டடத்தில் மிகுந்த சிரமத்துக்கு மத்தியில் மக்களுக்கான சேவைகளை முன்னெடுத்து வருகின்றமையும் அவதானிக்கக் கூடியதாக உள்ளது. (9-281)

# இரத்ததான முகாம்

(கிளிநொச்சி)

தற்போதைய நாட்டின் சூழ் நிலை கருதி பூஜ்ய குருதேவர் சுவாமி சின்மயானந்தரின் ஜெய ந்தியை முன்னிட்டு கிளிநொச்சி சின்மயா மிஷனின் ஏற்பாட்டில் இரத்ததான முகாம் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணி முதல் ஒரு மணிவரை கிளிநொச்சி கிளிநகர் சின்மயா மிஷனில் நடை பெறவுள்ளது. (9)

# வீதிகள் புனரமைப்பு



(கிளிநொச்சி)

கரைச்சி பிரதேச சபையினால் வீதி புனரமைப்புப் பணிகள் நேற்று முன்தினம் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

அத்தியாவசிய வேலைகளை மேற்கொள்வதற்காக ஊரடங்குச் சட்டம் தளர்த்தப்பட்டுள்ள நிலையில் கரைச்சி பிரதேச சபையினால் பரந்தன் பகுதி வீதிகளான சிவபுரம் பாடசாலை பின் வீதி, சிவபுரம் வீதி போன்ற வீதிகளே இன்று புனரமைப்பு செய்வதற்கான பணிகள் ஆரம்பிக்கப்பட்டன.

குறித்த புனரமைப்புப் பணிகளை கரைச்சி பிரதேச சபையின் தவிசாளர் வேழமாலிகிதன் ஆரம்பித்து வைத்தார். (9)

# காரணம் தெரியாமல் கலைந்த வளர்ப்பு தேனீக்கள்

## வாழ்வாதாரத்தை இழந்துள்ள மன்.தேனீ வளர்ப்பாளர்கள்



(மன்னார்)

மன்னார் நானாட்டான் பிரதேசத்திற்கு உட்பட்ட எருவிட்டான் கிராமத்தில் நீண்டகாலமாக வீட்டுத் தோட்டங்கள் மூலமாகவும் தேனீ வளர்ப்பின் மூலமாகவும் வாழ்வாதாரத்தை மேற்கொண்டு வந்த வாழ்வாதார பயனாளர்கள் இரண்டு மாதங்களாக தேனீக்களை வளர்த்து வந்த நிலையில் அதில் அதிகளவான தேனீக்கள் பறந்து சென்று விட்டதாக பாதிக்கப்பட்ட தேனீ வளர்ப்பாளர்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

இன்னும் ஒரு மாதத்தில் தேன் சேகரிக்கக் காத்திருக்கும் நிலையில் இருந்த தேனீக்களே கலைந்து சென்றுள்ளன. இதற்கு முன் இவ்வாறான சம்பவங்கள் நிகழ்ந்தது இல்லை எனவும் இதுவரை இதற்கான காரணம் என்னவென்று தெரியவில்லை என்றும் பாதிக்கப்பட்ட தேனீ வளர்ப்பாளர்கள் தெரிவித்துள்ளனர்.

கடந்த வருடம் மன்னார் விவசாய திணைக்களத்தினால் சிறந்த வீட்டுத்தோட்ட செய்கையாளருக்கான விருதினை மன்னார் பிரதி மாகாண விவசாயப் பணிப்பாளரிடம் இருந்து பெற்றிருந்தவரும் மேற்படி பிரச்சினையால் பாதிக்கப்பட்டு வாழ்வாதாரத்தை இழந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (9-285)

# இலங்கை அரசியலமைப்பும் 19 வது திருத்தம் சம்பந்தமான விமர்சனங்களும்

11

கலாநிதி க.தவலிங்கம், தவிசாளர் -எல்லை நிர்ணய ஆணைக்குழு,
ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்.



சட்டத்தின் பிரிவு 5(1) ஊ

சட்டத்துறை தலைமையதிபதிக்கும் அல்லது அவரின் கடமைகளை புரிகையில் சட்டத்துறை தலைமையதிபதிக்கு உதவுகின்ற எவரேனும் அலுவலருக்கும் பகிரங்க அலுவலரொருவருக்கும் இடையிலான ஏதேனும் தொடர்பாடல் உட்பட ஏதேனும் எழுத்திலான சட்டத்தின் கீழ் வெளிவிடப்படுவதற்கு அனுமதிக்கப்படாத உயர் தொழிலர் ஒருவருக்கும் அத்தகைய உயர் தொழிலர் எப் பகிரங்க அதிகாரி ஒருவருக்கு சேவையை வழங்குகின்றாரோ அப் பகிரங்க அதிகாரியொருவருக்கும் இடையிலான ஏதேனும் தொட்ர்பாடலை தகவல் கொண்டமைந்திருக்குமிடத்து தக்வலைப்பெற அணுகுதலுக்கான வேண்டுகோளொன்று மறுக்கப்படுதல் வேண்டும்.

சட்டத்தின் பிரிவு 5(1) எ

ஒரு நம்பக உறவு நிலைத்திருக்கும் காரணத்தால் தகவலானது அந்தரங்கமாக வைத்திருக்கத் தேவைப் படுத்தப்படுமிடத்து தகவலைப்பெற அணுக்தலுக்கான வேண்டுகோளொன்று மறுக்கப்படுதல் வேண்டும்.

சட்டத்தின் பிரிவு 5(1) ஏ

அத்தகைய தகவலின் வெளிவிடுகையானது (I) ஏதேனும் குற்றத்தைத் தடுப்பதை அல்லது துப்புத் துலக்குவதை அல்லது தவறாளிகளை கைப்பற்றுவதை அல்லது அவருக்கெதிராக குற்ற வழக்குத் தொடுப்பதை பாதகமாகப் பங்கப்படுத்தக் கூடியவிடத்து அல்லது (II) சட்ட நடைமுறைப்படுத்துகை அல்லது தேசிய பாதுகாப்பு தொடர்பான தகவலின் அந்தரங்க மூலகமொன்றின் அடையாளத்தை ஆய்ந்தறியப்படுவதற்கு வெளிக்காட்டுமிடத்து தகவலைப்பெற அணுகுதலுக்கான வேண்டுகோளொன்று மறுக்கப்படுதல் வேண்டும்.

சட்டத்தின் பிரிவு 5(1) ஐ

தகவலானது, மூன்றாம் தரப்பினரால் சம்பந்தப்பட்ட பகிரங்க அதிகாரசபைக்கு அந்தரங்கமாக வழங்கப் பட்டிருந்து அத்துடன் அம்மூன்றாம் தரப்பு அதனை வெளிவிடுவதற்குச் சம்மதமளிக்காதவிடத்து தகவலைப் பெற அணுகுதலுக்கான வேண்டுகோளொன்று மறுக்கப்படுதல் வேண்டும்.

சட்டத்தின் பிரிவு 5(1) ஒ

அத்தகைய தகவலின் வெளிவிடுகையானது, நீதிமன்ற அவமதிப்பாக உள்ளவிடத்து அல்லது நீதித் துறையின் அதிகாரத்தையும் பாரபட்சமின்மையையும் பேணுவதற்குப் பங்கம் விளைவிப்பதாக உள்ளவிடத்து தகவலைப்பெற அணுகுதலுக்கான வேண்டுகோளொன்று மறுக்கப்படுதல் வேண்டும்.

சட்டத்தின் பிரிவு 5(1) ஓ

அத்தகைய தகவலின் வெளிவிடுகையானது, பாராளுமன்றத்தின் அல்லது சட்டத்தினால் ஏற்பாடு செய்யப் பட்டவாறாக மாகாணசபையொன்றின் சிறப்புரிமைகளின் மீறலாக உள்ளவிடத்து தகவலைப்பெற அணுகுதலுக்கான வேண்டுகோளொன்று மறுக்கப்படுதல் வேண்டும்.

சட்டத்தின் பிரிவு 5(1) ஔ

தகவலின் வெளிவிடுகையானது, பரீட்சைத் திணைக்களத்தால் அல்லது உயர்கல்வி நிறுவனத்தால் நடத்தப்படுவதாகவுள்ள பரீட்சையொன்றின் சீரியநிலைக்கு தீங்காக உள்ளவிடத்து தகவலைப்பெற அணுகுதலுக்கான வேண்டுகோளொன்று மறுக்கப்படுதல் வேண்டும்.

சட்டத்தின் பிரிவு 5(1) க

எந்த அமைச்சரவைக் குறிப்பறிக்கையொன்று தொடர்பாக முடிபொன்று எடுக்கப்பட்டிருக்கவில்லையோ அந்த அமைச்சரவைக் குறிப்பறிக்கையினதாக தகவலானது உள்ளவிடத்து தகவலைப்பெற அணுகுதலுக்கான வேண்டுகோளொன்று மறுக்கப்படுதல் வேண்டும்.

சட்டத்தின் பிரிவு 5(1) ங

தகவலானது, அந்தரங்கமானதாக வைத்திருக்கப் படுவதற்கு இயைபான தேர்தல் சட்டங்களின் மூலம் தேவைப்படுத்தப்பட்டதும் தேர்தல்கள் ஆணையாளரினால் நடத்தப்பட்டதுமான தேர்தலொன்று தொடர்பானதாக உள்ளவிடத்து, தகவலைப்பெற அணுகுதலுக்கான வேண்டுகோளொன்று மறுக்கப்படுதல் வேண்டும்.

சட்டத்தின் பிரிவு 5(2)

உட்பிரிவு 5(1)ன் ஏற்பாடுகள் எவ்வாறிருப்பினும், கோரப்பட்ட தகவல் பத்து ஆண்டுகளுக்கு மேல் பழைமையானதாக இருப்பின், 5(1) (அ), (ஆ), ((உ), (ஊ), (எ), (ஏ) மற்றும் (ஒ) என்னும் பந்திகளில் குறிப்பீடு செய்யப்பட்ட ஏதுக்கள் தவிர்ந்த, அதில் குறிப்பீடு செய்யப்பட்ட ஏதுக்களுள் எதனது மீதும் தகவலுக்கான கோரிக்கையொன்று மறுக்கப்படுதலாகாது.

சட்டத்தின் பிரிவு 5(3)

உட்பிரிவு 5(1)ன் (இ), (எ) உட்பிரிவில் குறிப்பீடு

**கோரப்பட்ட தகவல் ஆண்டுகளுக்கு மேல் பழைமையானதாக இருப்பின், அக் கோரிக்கை மறுக்கப்படுதலாகாது. சட்டத்தின் பிரிவு 5(2). தகவலுக்கான கோரிக்கையொன்று, தகவலின் வெளிவிடுகையின் பகிரங்க அக்கறை அதனது வெளிவிடுகையிலிருந்து விளையும் தீங்கை விஞ்சியிருக்குமிடத்து, மறுக்கப்படுதலாகாது. சட்டத்தின் பிரிவு 5(4).**

செய்யப்படும் ஏதேனும் கடல்கடந்த வியாபார உடன்படிக்கை தொடர்பிலான ஏதேனும் தகவலானது, பேரம் பேசுதல்கள் பத்தாண்டுகள் கழிந்த பின்னர் கூட முடிவடையாதிருக்குமிடத்து, வெளிவிடுதலாகாது.

சட்டத்தின் பிரிவு 5(4)

உட் பிரிவு 5(1)ன் ஏற்பாடுகள் எது எவ்வாறிருப்பினும், தகவலுக்கான கோரிக்கையொன்று, தகவலின் வெளிவிடுகையின் பகிரங்க அக்கறை அதனது வெளிவிடுகையிலிருந்து விளையும் தீங்கை விஞ்சியிருக்குமிடத்து, மறுக்கப்படுதலாகாது.

சட்டத்தின் பிரிவு 5(5)

உட்பிரிவு 5(1)ன் கீழ் வெளிவிடுகையிலிருந்து விலக்களிக்கப்பட்ட ஏதேனும் தகவலைப்பெற அணுகுதலை அளிப்பதுடன் தொடர்புடைய ஒரு பிரச்சினை தொடர்பில் தகவல் அலுவலர், ஆணைக்குழுவின் மதியுரையை நாடிப்பெறலாமென்பதுடன் ஆணைக்குழுவானது இயலுமானளவு விரைவானதாக பதினான்கு நாட்களினுள் ஏதேனும் பட்சத்தில், அதன் மதியுரையினை வழங்கலாம்.

சட்டத்தின் பிரிவு 5(6)

ஐந்தாம் பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட ஏதுக்கள் எதனதும் மீது தகவலுக்கான கோரிக்கையொன்று மறுக்கப்படுமிடத்து, வெளிவிடுகையிலிருந்து விலக்கப்பட்ட தகவலைக் கொண்டுள்ள ஏதேனும் பாகத்திலிருந்து நியாயமாக வேறு பிரிக்கக்கூடியதும் அப்பிரிவின்கீழ் வெளிவிடுகையிலிருந்து விலக்களிக்கப்படாத ஏதேனும் தகவலைக் கொண்டுள்ள ஏதேனும் பதிவேட்டின் அல்லது ஆவணத்தின் அப்பாகத்துக்கு எவ்வாறாயினும், அணுக்கம் அளிக்கப்படலாம்.

இலங்கை தகவலறியும் உரிமைக்கான ஆணைக் குழு - தகவலறியும் உரிமை சட்டத்தின் 11ஆம் பிரிவு

இலங்கை தகவலறியும் உரிமைக்கான ஆணைக்குழு 2016ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க தகவலறியும் உரிமை சட்டத்தின் 11ஆம் பிரிவின் கீழ் குறித்த சட்டத்தின் செயற்பாட்டை கண்காணிக்கும் மற்றும் அமுல்படுத்தும் பிரதான நிறுவனமாக உள்ளது. குற்றமிழைக்கும் உத்தியோகத்தர்களுக்கு எதிரான, ஒட்டியொழுகாமை மீதான முறைப்பாடுகளை விசாரணை செய்வதற்கும் ஒழுக்காற்று நடவடிக்கைகளை சிபார்சு செய்வதற்கும் அதிகாரங்களைக் கொண்டுள்ள ஒரு நியாதிக்க சுயாதீன சபையாக இது உள்ளது. சட்ட்த்தில் வரைவிலக்கணம் செய்த குற்றங்களைச் செய்தவர்களை பிரிவுகள் 15, 38(2) மற்றும் 39(4)) சட்டத்தின் முன் நிறுத்த அதிகாரங்களைக் கொண்டுள்ளது.

அரசியலமைப்புச் சபையின் சிபார்சின் பேரில் ஜனாதிபதியால் நியமிக்கப்பட்ட ஒரு தலைவரையும், 4 உறுப்பினர்களையும் அங்கத்தவர்களாக கொண்டுள்ளது. இந்த ஆணைக்குழுவிற்கு

**இலங்கை தகவலறியும் உரிமைக்கான ஆணைக்குழு 2016ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க தகவலறியும் உரிமை சட்டத்தின் 11ஆம் பிரிவின் கீழ் குறித்த சட்டத்தின் செயற்பாட்டை கண்காணிக்கும் மற்றும் அமுல்படுத்தும் பிரதான நிறுவனமாக உள்ளது. இவ் ஆணைக்குழு அரசியலமைப்புச் சபையின் சிபார்சின் பேரில் ஜனாதிபதியால் நியமிக்கப்பட்ட ஒரு தலைவரையும், 4 உறுப்பினர்களையும் அங்கத்தவர்களாக கொண்டுள்ளது.**

1) இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் 2) ஊடக நிறுவனங்கள் மற்றும் 3) ஏனைய சிவில் சமூக நிறுவனங்கள் (பிரிவுகள் 12 (1)) ஆகியவற்றில் சிபாரிசு செய்யப்பட்ட தலா ஒருவரையும் நியமிப்பதற்கு அரசியலமைப்பு சபை கடமைப்பட்டுள்ளது.

சிபார்சு செய்யப்படும் நபர்கள் பொதுவாழ்வில் மதிப்பிற்குரியவர்களாக இருப்பதுடன், அரசியல், அரச துறை அல்லது நீதித்துறை அல்லது வேறு ஏதும் இலாபகரமான அலுவலகம் என்பவற்றுடன் அல்லது வேறு ஏதும் அரசியல் கட்சிகளுடன் தொடர்பற்ற இலாப நோக்கம் கொண்ட தொழில்வாண்மை அல்லது ஏதும் தொழிலை மேற்கொள்பவராக இல்லாது அனுபவமிக்கவராக இருக்க வேண்டும் (பிரிவு 12(2)).

ஆணையாளர்களின் பதவிக்காலம் 5 வருடங்களாக இருப்பதுடன் தகவலறியும் உரிமைச்சட்டத்தின் 12(6) பிரிவின் கீழ் விதிவிலக்களிக்கப்பட்டுள்ள தகவல்களை வெளியிடாதிருக்கவும் கடமைப்பட்டுள்ளார்கள் (பிரிவு 12(7)).

ஆணைக்குழுவானது ஒரு பணிப்பாளர் நாயகத்தையும் ஏனைய உத்தியோகத்தர்களையும் தேவையான பணியாளர்களையும் நியமிக்கும். ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகம் அதன் நிறைவேற்று அதிகாரியாக விளங்குவார் (பிரிவு 13).

ஆணைக்குழு பாராளுமன்ற வாக்கெடுப்பின் மூலம் அதற்கு ஒதுக்கப்பட்டுள்ள நிதியை கொண்டு செயற்படுவதுடன் அதற்கு கிடைக்கும் நன்கொடைகள், அன்பளிப்புக்கள் அல்லது மானியங்கள் மட்டும் வெளிநாட்டு மூலங்களில் இருந்து கிடைக்கும் நிதி ஆகியன ஆணைக்குழுவின் கணக்கில் வரவு வைக்கப்படும் (பிரிவு 16 (1)).

இலங்கை தகவலறியும் உரிமைக்கான ஆணைக் குழுவின் இலக்குகள்

- வேண்டுகோள்களை செயன்முறைப்படுத்துவதற்கு இயலச் செய்யும் ஏற்பாடுகளை ஊக்குவித்தல்: மேன்முறையீடுகள் தொடர்பாக ஒழுங்குகளை உருவாக்குதல், விசாரணைச் செயன்முறைகள், தகவல் வழங்குவதற்கான கட்டண அட்டவணை மற்றும் அறிக்கை வடிவொழுங்குகள், தகவலறியும் உரிமை சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு விளைவு கொடுக்கும் நோக்கத்திற்காக பணிப்புரைகளையும் வழிகாட்டுதல்களையும் பிரசுரித்தல், ஊடக அமைச்சால் முன்மொழியப்பட்ட ஒழுங்குவிதிகள் மீதான மதியுரை, ஆணைக்குழுவின் மேலோட்டப்பார்வை மற்றும் தீர்ப்பு வழங்கல் வகிபங்கை பகிரங்கப்படுத்தல்.
- செயல்விளைவுடைய தீர்ப்பு வழங்கல் மற்றும் அமுல்படுத்தல்: அரசாங்க அதிகாரிகளுக்கும் தகவல் கோருவோருக்கும் இடையிலான பிணக்குகளில் வினைத் திறனுடன் தீர்ப்பு வழங்கல்.
- அரச உத்தியோகத்தர்களின் பயிற்சிகளுக்கு ஆதரவு வழங்குதல்: அரச உத்தியோகத்தர்களின் பயிற்சியில் கூட்டுழைப்பு, மற்றும் பங்காண்மை யாளர்களுக்கான தகவல் அறியும் உரிமை மீதான விசேடித்த பயிற்சிகளில் ஆதரவளித்தல்.
- பொது விழிப்புணர்வை அதிகரித்தல்: ஆணைக் குழுவின் இணையத்தளம் மற்றும் ஏனைய ஊடகங் கள் ஊடாக தகவலறியும் உரிமைசட்டத்தினை குறித்து பொதுமக்களின் விழிப்புணர்வைஅதிகரித்தல்.
- ஆவண முகாமைத்துவத்தை முன்னேற்றுதல்: வழிகாட்டுதல்களின் வழியாக தகவல்கள் முகாமைத்துவம் மீதான நுணுக்கமான பணிப்புக்களை வழங்குதல்
- துடிப்பான செயற்பாட்டு வெளிப்படுத்துகையை அதிகரித்தல்: வழிகாட்டல்களை வழங்குவதன் மூலம் தகவல் வெளிப்படுத்துகையின் துடிப்பான செயற்பாட்டை வளர்த்துக்கொள்ளல், குறைந்தபட்ச நியமங்களை விதித்தல், தற்போதைய சட்டங்களுக்கு மீளமைப்புக்களையும் காலத்திற்கேற்ப மதிப்பீட்டு அறிக்கைகளைவும் வழங்கல்
- செயல்விளைவுடைய கண்காணிப்பு மற்றும் மதிப்பீட்டு முறைமையை நிறுவுதல்: பொருத்தமான இணையவழி தீர்வுகள் மற்றும் மதிப்பீட்டுக் கருவிகளை பயன்படுத்துவதன் ஊடாக அரச அதிகாரிகள் தகவலறியும் உரிமையை அமுல்படுத்துவதன் செயல்விளைவை கண்காணித்தலும் மதிப்பீட்டை மேற்கொள்ளலும்.

இலங்கை தகவலறியும் உரிமைக்கான ஆணைக் குழுவின் கடமைகளும் தொழிற்பாடுகளும்

சட்டத்தின் கீழ் அரச அதிகாரிகள் 'அவர்களின் கடமைகளுடன் ஒத்துப்போவதை கண்காணிப்பதற்கான கடமையை ஆணைக்குழு கொண்டிருக்கிறது. அத்துடன் தகவலறியும் உரிமை தொடர்பில் அரச நிறுவனங்கள் மேற்கொள்ள வேண்டிய மறுசீரமைப்புக்களை சிபாரிசு செய்தல், தகவல்களை வெளியிடுவதற்கான கட்டணத்தை நியாயமான முறையில் தீர்மானித்தல் போன்ற வழிகாட்டுதலையும் ஆணைக்குழு வழங்குகின்றது.

அத்துடன் தகவ்ல்களை இலவசமாக வழங்கக்கூடிய சந்தர்ப்பங்களை இனம்காணல், கட்டணங்களை அறுதியிட்டுரைத்தல், அரச அதிகாரிகளுக்கான பயிற்சி நிகழ்ச்சி திட்டங்களுடன் இணைந்து செயற்படுதல், சட்டத்தின் கீழான உரிமைகள் மற்றும் தேவைப் பாடுகளை மக்களறியும் வகையில் தெரியப்படுத்தல் மற்றும் அரச உத்தியோகத்தர்களுக்கான ஆவணங்களை பேணல் தொடர்பான வழிகாட்டுதலை வழங்குதல் ஆகியன ஆணைக் குழுவின் பிரதான கடமைகளாக உள்ளன (பிரிவு 14).

(தொடரும்....)

# தற்கொலைத் தாக்குதலுக்கு பாதுகாப்புப் பிரிவே பொறுப்பு

## முன்னாள் எம்.பி. அருந்திக தெரிவிப்பு நல்லாட்சி தலைவர்கள் மீதும் சாடல்



(கொழும்பு)

உயிர்த்த ஞாயிறு தின தற்கொலைத் தாக்குதலுக்கு நல்லாட்சி அரசாங்கத்தின் இரு அரச தலைவர்களும் பாதுகாப்புப் பிரிவின் முக்கிய தரப்பினரும் பொறுப்புக் கூற வேண்டும்.

நாட்டில் இனி அடிப்படைவாத தீவிரவாதச் செயற்பாடுகள் தோற்றம் பெறாதளவிற்கு தேசிய பாதுகாப்புப் பலப்படுத்தப்பட்டது என முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் அருந்திக பெர்னாண்டோ தெரிவித்தார்.

மேலும், உயிர்த்த ஞாயிறு தினக் குண்டுத்தாக்குதல் இடம்பெற்று, ஒரு வருடம் கடந்துள்ளது. இந்தத் தாக்குதல் திடீரென இடம்பெற்றதல்ல. இத்தாக்குதல் தொடர்பில் நல்லாட்சி அரசாங்கத்திற்கு முன்கூட்டியே அனைத்துத் தகவல்களும் தொடர்ந்து கிடைக்கப்பெற்றன. ஆனால் அரச தலைவர்களின் தனிப்பட்ட முரண்பாடுகளால் எவ்வித நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை.

நல்லாட்சி அரசாங்கத்தின் கவனயீனத்தால் தற்கொலைக் குண்டுத்தாக்குதல் இடம்பெற்று 250 இற்கும் மேற்பட்டோர் உயிரிழந்ததுடன், 500இற்கும் அதிகமானோர் காயமடைந்தனர். இதற்கு நல்லாட்சி அரசாங்கத்தின் இரு அரச தலைவர்களும் பொறுப்புக்கூற வேண்டும்.

குண்டுத்தாக்குதலுடன் தொடர்புடையதாகக் குற்றம் சாட்டப்பட்டவர்கள் பாராளுமன்றத் தெரிவுக் குழுவிற்கு உறுப்பினர்களாக தெரிவு செய்யப்பட்டனர். உண்மையைக் கண்டறிவதற்குப் பதிலாக குற்றவாளிகளை பாதுகாப்பதே தெரிவுக்குழுவின் நோக்கமாகக் காணப்பட்டது. தெரிவுக் குழுவால் எந்தவித உண்மையும் கண்டறியப்படவில்லை.

தேசிய பாதுகாப்பைக் கருத்திற் கொண்டே பெரும்பாலான மக்கள் ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்தினார்கள்.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தேசிய பாதுகாப்புக்கு மாத்திரம் முக்கியத்துவம் வழங்குவார்.

நாட்டில் தீவிரவாத செயற்பாடுகள் இனியொரு போதும் இடம்பெறாதளவிற்கு தேசிய பாதுகாப்புப் பலப்படுத்தப்படும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# படையினரால் கிருமித் தொற்று நீக்கல்





(சாவகச்சேரி)

சாவகச்சேரி 523ஆவது படைத் தலைமையகத்தினரால் நேற்றுப் புதன்கிழமை காலை சாவகச்சேரியில் சதொச விற்பனை நிலையம், பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் மற்றும் தென்மராட்சிப் பிரதேச செயலகம் ஆகிய இடங்களில் கிருமி நாசினி விசிறப்பட்டது.

இதேவேளை எதிர்வரும் தினங்களில் சாவகச்சேரியிலுள்ள வங்கிகளில் கிருமி நாசினி தெளிக்கப்படும் என படையினர் தெரிவித்தனர். (இ-30)

# தனிமைப்படுத்தலைப் பூர்த்தி செய்த 142 பேர் நேற்று வீடு திரும்பினர்

## இராணுவத் தளபதி சவேந்திர தகவல்

(கொழும்பு)

இராணுவத்தினரால் கண்காணிக்கப்பட்டு வரும் முகாம்களிலிருந்து 142 பேர் பி.சி.ஆர் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டு தனிமைப்படுத்தல் செயன்முறையைப் பூர்த்தி செய்து நேற்று வீடு திரும்பினர் என இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்தார்.

கொரோனா வைரஸ் அச்சத்தையடுத்து. இராணுவ முகாம்கள் உள்ளிட்ட தனிமைப்படுத்தல் முகாம்களில் தங்கவைக்கப்பட்டு பரிசோதனை மேற்கொள்ளப்பட்ட 4348 பேர். இது வரை தனிமைப்படுத்தல் செயன்முறையைப் பூர்த்தி செய்து வீடு திரும்பினர் என்று இராணுவத் தளபதி தெரிவித்தார்.

மேலும், 1582 பேர் தொடர்ந்தும் தனிமைப்படுத்திக் கண்காணிக்கப்பட்டு வருகின்றனர் என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

கொரோனாத் தொற்றுக்குள்ளானவர்கள் அதிகரித்துள்ள கொழும்பு வாழைத் தோட்டம் பகுதியிலிருந்து 1110 பேரும், ஏனைய பகுதிகளிலிருந்து 242 பேரும் இராணுவத்தினரால் தனிமைப்படுத்திக் கண்காணிக்கும் 03 முகாம்களுக்கு அழைத்துச் செல்லப்பட்டனர் எனவும் அவர் குறிப்பிட்டார்.

பொரலஸ்கமுவ மற்றும் பிலியந்தலைப் பகுதிகளில் இருவர் கொவிட்-19 தொற்றுக்குள்ளானமை அடையாளங் காணப்பட்டது.

இவர்களுடன் நெருங்கிய தொடர்புகளைக் கொண்டிருந்த குடும்பத்தார் மற்றும் உறவினர்கள் தனிமைப்படுத்தல் முகாம்களுக்கு அழைத்துச் செல்லப்பட்டனர் என்றும் அவர் கூறினார்.

பொரலஸ்கமுவ பகுதியில் தொற்றுக்குள்ளானவர் சிகிச்சைக்காக சென்றிருந்த, தனியார் வைத்தியசாலையின் பணியாளர்களும் பரிசோதனைக்குள்ளாக்கப்பட்டு தனிமைப்படுத்தப்பட்டதுடன் குறித்த வைத்தியசாலை தற்காலிகமாக மூடப்பட்டது எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.



அதேபோன்று பிலியந்தலையில் அடையாளங் காணப்பட்ட தொற்றுக்குள்ளானவர் தொடர்பு கொண்டிருந்த குடும்பத்தார் மற்றும் உறவினர்கள் நேற்று முன்தினம் தனிமைப்படுத்தல் முகாம்களுக்கு அழைத்துச் செல்லப்பட்டனர் என்றும் அவர் தெரிவித்தார். (இ-7)

# இன்று ஒரு தகவல்

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

## புண்ணிய தீர்த்தம்!

ஹடயோகி ஒருத்தன் ஒரு மகானிடம் போனான். "ஆகாயத்திலே பறக்கிற சக்தி எனக்கு இருக்கு!" என்றான். அவர் பார்த்தார் "குருவி-கழுகு எல்லாம் கூடத்தான் ஆகாயத்திலே பறக்கிறது!" என்றார். என்னை பூமியிலே புதைத்து வைத்தால்கூட ரொம்பக் காலம் அப்படியே இருப்பேன் என்றான் அவன்.

"புழு பூச்சிகள் கூட பூமிக்கு அடியிலே ரொம்பக் காலம் இருக்க முடியுமே" என்றார் அவர்.

எனக்கு 'ஜலஸ்தம்பம்' தெரியும் என்றான் அவன்.

"மீன் கூடத்தான் தண்ணியிலே இருக்கு" என்றார் அவர். அதுக்கு மேலே அவனாலே பேச முடியவில்லை.

"நமக்கு சித்து வேலைகளெல்லாம் தெரியும் என்று பெருமையாகச் சொன்னா அதை இவர் இப்படி அநாயசமா தூக்கிப் போட்டிட்டாரே!" என்று நினைத்தான். இப்ப அந்த மகான் சொன்னார்,

"இதோ பாரப்பா...பறவைகள் மாதிரியும் புழுக்கள் மாதிரியும் மீன்கள் மாதிரியும் தாழ்ந்த ஜந்துக்கள் போல நடந்து கொள்கிறதனாலே என்ன பிரயோசனம்? மனிதனை மாதிரி நடக்க கற்றுக்கொள், கடவுள் மாதிரி ஆக கற்றுக்கொள், கர்வத்தையும் கோபத்தையும் அடக்கு. கருணையையும் நல்ல குணங்களையும் விருத்தி செய்!" என்று சொன்னார்!

மனம் தன்னுடைய வாசனைகள் எல்லாத்தையும் இழந்து அதன் உண்மையான உருவத்தை அடைகிறது தான் எல்லா சித்துக்களையும் விட மேலானது. மனம் சுத்தமா இருக்க வேண்டும்.

தீர்த்தங்களிளெல்லாம் போய் நீராடுகிறது எதற்காக? மனசு சுத்தமாகிறதுக்குத்தான். உடம்பு சுத்தமாக வேண்டும் என்றால் அதை வீட்டிலேயே சோப்பு போட்டு குளித்துவிடலாமே! அதுக்கு என்னத்துக்கு செலவு செய்துகொண்டு அவ்வளவு தூரம் போக வேண்டும்.

வினோபாஜி ஒரு கதை சொன்னார். அது என்ன தெரியுமா? ஒரு பெரிய மனுசன் ரொம்ப வசதியான ஆள். செல்வந்தன். அவன் யாத்திரை செய்ய புறப்பட்டான். தன்னுடைய வேலைக்காரனையும் கூட அழைத்துக்கொண்டு போனான். போற இடங்களிலே சமையல் செய்து போட வேண்டும் அல்லவா அதுக்காக.

ஒரு வருடம் முழுவதும் எங்கெங்கேயோ சுற்றினார்கள். புண்ணிய ஸ்தலங்களுக்கெல்லாம் போனார்கள். புனிதமான தீர்த்தங்களிலேயெல்லாம் நீராடினார்கள்.

கடைசியா வீட்டுக்கு வந்து சேர்ந்தார்கள். வந்து சேர்ந்தவுடனே அந்த வேலைக்காரன் சமையல் செய்தான். அந்தப் பெரிய மனிசனை உட்கார வைத்து சாப்பாடு போட்டான். அவர் சாப்பிட ஆரம்பித்தார். முடியவில்லை.

சாப்பாட்டிலே ஒரு மாதிரியான வாசனை! மோசமான வாசனை. அவராலே அந்த இடத்திலே உட்காரவே முடியவில்லை. அவ்வளவு மோசம். "என்னடா சமையல் இது?" என்று வேகமாக சத்தம் போட்டார். அவன் பக்குவமாக வந்து இவர் முன்னால் நின்றான். புனிதமான காய்கறிகளை உங்களுக்கு இன்றைக்கு சமைத்துப் போட்டிருக்கேன் என்றான்.

இவருக்கு ஒன்றுமே புரியலை. என்னடா சொல்லுறாய் என்றார். அவன் மெதுவாக விபரம் சொல்ல ஆரம்பித்தான். அது வந்து ஐயா...நாம இங்கேயிருந்து புறப்படும்போது நம்மகூட கொஞ்சம் உருளைக்கிழங்கையும் எடுத்துக்கொண்டு வந்தேன். நாம நீராடின போதெல்லாம் நான் இந்த உருளைக்கிழக்குகளை புண்ணிய தீர்த்தங்களிலே குளிப்பாட்டினேன். கங்கை, யமுனை, காவேரி போன்ற புண்ணிய நதிகளிலே நீராடின உருளைக்கிழங்கைத்தான் இன்றைக்கு உங்களுக்கு சமைத்துப் போட்டேன் என்றான்.

என்னடா இப்படி செய்து போட்டாய்? என்றார். இதெல்லாம் அசுத்தமானது இல்லை. ரொம்பவும் பரிசுத்தமானது. எல்லா நதிகளிலேயும் நீராடின இது அசுத்தம் என்றால் எல்லா தீர்த்தங்களிலேயும் நீராடின நீங்களும் அசுத்தமானவரா என்று கேட்டான்.

அந்தப் பெரிய மனுசனுக்கு புத்தி வேலை செய்ய ஆரம்பித்தது. தீர்த்தங்களிலே நீராடுகிறதாலே மட்டும் யாரும் புனிதமடைந்திட முடியாது என்கிற உண்மையை அந்த வேலைக்காரன் மூலமாக புரிந்து கொண்டார்.

உடல் சுத்தமாகிற அதே நேரத்திலே மனசும் சுத்தமாக வேண்டும். அப்பதான் மனுசனா வாழ முடியும். தெய்வமாக உயர முடியும். அதைவிட்டிட்டு புண்ணிய யாத்திரை செய்கிறேன் என்று வேடம் போட்டுக்கொள்வதனாலே ஒன்றும் பிரயோசனம் இல்லை.

ஒரு புண்ணிய ஷேத்திரம். அங்கே ஒரு தீர்த்தம். அதிலே ஒருத்தன் ஒரு நாள் முழுவதும் முழுகி எழுந்திருந்தான். ரொம்ப பக்தி போல இருக்கு. அதுக்கப்புறம் கரையேறி வந்தான். கரையிலே உட்கார்ந்திருந்த ஒரு மகானிடம் வந்து நின்றான் ஈரத் துணியோடு.

சுவாமி நான் கடைத் தேறுவதுக்கு வழி சொல்லுங்க என்றான் ரொம்ப பணிவாக. அதுதான் புண்ணிய தீர்த்தத்திலே நீராடிவிட்டியே. பாவம் எல்லாம் தொலைஞ்சுது. போயிட்டுவா என்றார்.

தொலைஞ்சுது பாவம் இல்லை சாமி. என் சம்சாரத்தோட தங்கச் சங்கிலி. இங்கே வந்து முழுகினபோது தொலைஞ்சு போச்சு. அதை கண்டு பிடித்துக்கொண்டு வந்தால் தான் சாப்பாடு என்று சொல்லிவிட்டாள். அதுதான் இன்றைக்குக் காலையிலேயிருந்து அதே இடத்திலே முழுகி முழுகி எழுந்திருக்கிறேன். அகப்படுற வழியைக் காணோம். அப்படி என்றான் அவன்.

மனிதனுக்கு துணிச்சலைப் போல
உண்மையான நண்பன்
வேறு யாருமில்லை - சாணக்கியர்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## முன்பு சார்பாக இருந்தவர் இப்போது இல்லை என்பதற்காக...

கொரோனா தொற்றைக் கட்டுப்படுத்துவதற்கான பணியில் ஈடுபட்டிருக்கின்றவர்கள், ஊரடங்குச் சட்டம் தொடர்ந்து அமுலாகி இருக்கின்ற வேளை மக்களுக்கான நிவாரணப் பணிகளில் ஈடுபட்டிருக்கின்ற அரச உத்தியோகத்தர்கள், பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள், சமய சமூக சேவையாளர்கள், தனி நபர்கள் என்போர் போற்றுதலுக்கும் பாராட்டுதலுக்கும் உரியவர்கள்.

காலத்தால் செய்த நன்றி சிறிதெனினும்
ஞாலத்தில் மாணப் பெரிது

என்பார் வள்ளுவர்.

ஆனால் இங்கு தங்களை, தங்கள் குடும்பங்களை நினையாமல் பேரிடர் வந்துற்றபோது மக்கள் பணி செய்வதே மகேசன் பணி என்றுணர்ந்து சேவையாற்றுகின்ற அத்தனை பேரின் திருவடிகளையும் தொட்டு வணங்க முடியும்.

மக்களே! வெளியில் செல்லாதீர்கள், வீடுகளுக்குள் இருங்கள். இதுவே கொரோனாத் தொற்றிலிருந்து தப்புவதற்கான ஒரே வழி என அரசு அறிவித்திருக்கையில்,

கொரோனாவுக்குரிய அறிகுறிகள் தென்பட்டால் உடன் மருத்துவமனைக்கு வாருங்கள் என அழைக்கின்ற மருத்துவ சமூகம்;

நீங்கள் வீடுகளில் இருங்கள் உங்களுக்கான கொடுப்பனவை நாங்கள் உங்களைத் தேடி வந்து தருகிறோம் என்று கூறுகின்ற அரச உத்தியோகத்தர்கள்;

உணவுப் பொருள் இல்லை என்றால், எங்களை அழையுங்கள். நாங்கள் உங்கள் வீடு தேடி வந்து அவற்றைத் தருகிறோம் என்று கூறவல்ல சமூகப் பற்றாளர்கள் இவர்களில் இறைவன் தெரிகிறான்.

இதற்கு மேலாக ஊரடங்கு வேளையிலும் அலுவலகங்களைத் திறந்திருந்து நிலைமைகளைக் கண்காணித்து, நிவாரணப் பொருட்களைப் பங்கீடு செய்து மக்களின் அத்தியாவசிய தேவைகளைப் பூர்த்தி செய்வதில் அல்லும் பகலும் பாடுபடுகின்ற அரச உயர் அதிகாரிகள் அவர்களோடு இணைந்து சேவையாற்றுகின்றவர்கள் என அனைவரதும் பணி நன்றி மறவாமைக்குரியது.

எனினும் நம் மண்ணில் தமிழ் அரசியல்வாதிகள் சிலர் அரச உயர் அதிகாரிகளைத் தூற்றுவதிலும் அவர்களைக் கண்டித்து அறிக்கை விடுவதையுமே தங்களின் சமகால அரசியல் பணியாக நினைத்து செயற்படுகின்றனர்.

கொரோனாத் தொற்றின் அபாயம் பேரிடியைத் தந்து நிற்க, அன்றாடப் பொருளாதாரத்தை இழந்து மக்கள் அவலத்தில் இருக்க, இவர்கள் எழுந்தமானத்தில் அதிகாரிகளைத் தூற்றி அறிக்கை விடுவது எந்தவகையில் நியாயமாகும்.

அதிகாரிகள் பிழை விட்டால் - அவர்களின் செயற்பாட்டில் திருப்தி இல்லையென்றால், அவர்களைச் சந்தித்து உங்கள் கருத்தைக் கூறுங்கள். நிலைமை மோசமாக இருக்கும் இவ்வேளையில் நாம் அனைவரும் சேர்ந்து பணியாற்றுவோம். உங்களுக்குத் தேவையான உதவிகளை வழங்க நாமும் முன்வருவோம் என்று கூறுங்கள்.

இதைவிடுத்து முன்பு உங்களுக்கு சார்பாக இருந்தவர் இப்போது அங்கு இல்லையே என்ற ஆத்திரத்தில் புதியவரைத் தூற்றுவது அறமன்று.

# வர்த்தக நலன்களுக்காக பரிந்துரைக்கப்பட்ட மாத்திரைகள்

## ட்ரம்ப் மீது குற்றச்சாட்டு

(வோஷிங்டன்)

கொரோனா நோயாளிகள் சிலர் ஹைட்ராக்சி குளோரோகுயின் மருந்துகளினால் மரணமடைந்துள்ளதாக தற்போது அமெரிக்காவிலிருந்து தகவல்கள் வெளியாகி வருகின்றன.

கொரோனா வைரஸ் சிகிச்சையில் மலேரியாவுக்கு எதிரான ஹைட்ராக்ஸி குளோரோகுயின் மருந்துகளின் பாதுகாப்புத் தன்மையை ஆய்வாளர்கள் பலரும் கேள்விக்குட்படுத்தி எச்சரித்து வரும் நிலையில் ஜனாதிபதி ட்ரம்ப் உட்பட பலரும் இது தான் தீர்வு என்ற ரீதியில் செயற்பட அது தற்போது பின்னடைவைச் சந்தித்துள்ளதாக அமெரிக்காவிலிருந்து வரும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

தன்னுடைய சொந்த வர்த்தக நலன்களுக்காக ஜனாதிபதி ட்ரம்ப் எந்த ஒரு விஞ்ஞான ஆதாரமும் இல்லாமல் இதை பரிந்துரை செய்ததாக குற்றச்சாட்டு எழுந்துள்ளன.

ஹைட்ராக்சி குளோரோகுயின் மருந்துகள் கொவிட்-19 நோயாளிகளின் வெண்டிலேட்டர் பயன்பாடுகளைத் தவிர்க்கப் பயன்படுகிறது என்பதற்கான எந்த ஒரு ஆதாரமும் இல்லை என்று ஒரு ஆய்வு நியூ இங்கிலாந்து மருந்து இதழில் வெளியானது.

இது தொடர்பில், என்.ஐ.எச். தனது அறிக்கையில்,

"கொவிட்-19 சிகிச்சைக்கான தெரிவுகள் தற்போது ஆய்வுகளில் உள்ளன. ஹைட்ராக்சி குளோரோகுயின் அல்லது குளோரோகுயின் கொவிட்- 19 சிகிச்சையில் பயன்படுத்தலாமா? வேண்டாமா? என்பது பற்றி மருத்துவத் தரவுகள் போதாமையாக உள்ளன. குளோரோகுயின் அல்லது ஹைட்ராக்சி குளோரோகுயின் அளித்தால் நோயாளியை மருத்துவர்கள் உன்னிப்பாக கண்காணித்து மோசமான விளைவுகள், பக்க விளைவுகள் ஏற்படுகிறதா? என்பதை தீர்மானிக்க வேண்டும்" என்று எச்சரித்துள்ளது.

இதனையடுத்து என்.ஐ.எச். நிபுணர்கள் ஹைட்ராக்சி குளோரோகுயின் மற்றும் அசித்ரோமைசின் ஆகியவற்றைச் சேர்த்து கொடுப்பதை கண்டிக்கின்றனர். ஏனெனில் இதனால் நச்சுத்தன்மை அதிகரிக்கலாம் என்று எச்சரித்துள்ளனர்.

ஆனால் அமெரிக்க உணவு மற்றும் மருந்துக் கழக ஆணையர் ஸ்டீபன் எம்.ஹான் இது தொடர்பாக இன்னும் இறுதி முடிவு எடுக்கப்படவில்லை என்று தெரிவித்தார்.

ஆதாரங்களின் அடிப்படையிலான விஞ்ஞானமே நெருக்கடியிலிருந்து மீள வழி. நாம் இன்று கொண்டாடும் உலகத்தரம் வாய்ந்த மருந்துகள், மருத்துவர்கள் பலதலைமுறைகளின் சிறந்த பணியாகும் என்கிறார் அமெரிக்க நாடாளுமன்ற உறுப்பினர்.

இந்நிலையில் ஆதாரமில்லாமல் ஹைட்ராக்சி குளோரோகுயினை ட்ரம்ப் பரிந்துரைத்தது பொறுப்பற்ற செயல். நான் ஏற்கனவே அமெரிக்க உணவு மருந்துக் கழகத்தை எச்சரித்துள்ளேன், ட்ரம்பின் அரசியல் நெருக்கடிகளுக்கு அடிபணிய வேண்டாம் என்று.

அறிவியலை நம்பாமல் அரசியலை நம்பினால் நாம் இன்னமும் தேவையற்ற மரணங்களை சந்திக்க வேண்டியதுதான். வரலாறு நம்மை மன்னிக்காது என்று காங்கிரஸ் உறுப்பினர் பில் பாஸ்க்ரெல் எச்சரித்தார்.

எவ்வாறாயினும், ட்ரம்ப் நிர்வாகம் 30 மில்லியன் டோஸ்கள் ஹைட்ராக்சி குளோரோகுயினை சேமிப்புச் செய்து வைத்துள்ளது.

இதில் பெருமளவு இந்தியாவிலிருந்து ஏற்றுமதி செய்யப்பட்டவை என்பது குறிப்பிடத்தக்கது. (ஜ-2)

# 1,800 பயங்கரவாதிகளின் பெயர் கண்காணிப்பு பட்டியலிலிருந்து நீக்கம்

## பாகிஸ்தான் இரகசிய நடவடிக்கை

(இஸ்லாமாபாத்)

மும்பைத் தாக்குதலுக்கு மூளையாக செயற்பட்டவர் உட்பட 1,800 பேரின் பெயர்களை பயங்கரவாதக் கண்காணிப்புப் பட்டியலில் இருந்து பாகிஸ்தான் அரசு இரகசியமாக நீக்கியதாக தகவல் வெளியாகியுள்ளது.

உலகளாவிய பயங்கரவாத ஒழிப்பு நடவடிக்கையில் அமெரிக்கா தீவிரமாக உள்ளது. பயங்கரவாதத்தை ஒழிப்பதற்கு தனக்கு பக்கபலமாக உள்ள நாடுகளுக்கு அமெரிக்கா இராணுவ நிதி உதவியும் அளித்து வருகிறது.

அமெரிக்காவின் இராணுவ நிதியுதவி பெற்று வருகிற நாடுகளில் ஒன்றாக பாகிஸ்தான் திகழ்கிறது.

ஆனால் பாகிஸ்தான், பயங்கரவாதிகளுக்கு எதிராக எந்தவொரு உறுதியான நடவடிக்கையும் எடுப்பதில்லை.

மாறாக எல்லை தாண்டிய பயங்கரவாதத்தை ஊக்குவித்து வருகிறது.

பயங்கரவாதிகளுக்கு ஆதரவுக்கரம் நீட்டி, சொர்க்கபுரியாக திகழ்ந்து வருகிறது.

இது அமெரிக்காவுக்கு அந்த நாட்டின் மீது மிகுந்த எரிச்சலை ஏற்படுத்தி வருகிறது.

இது தொடர்பாக பலமுறை பாகிஸ்தானுக்கு அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப் தொடர்ந்து எச்சரிக்கையும் விடுத்து வருகிறார்.

மேலும் பாகிஸ்தானுக்கு வழங்கி வந்த இராணுவ நிதியுதவியையும் அமெரிக்கா நிறுத்தி வைத்துள்ளது.

எனினும் பயங்கரவாதிகளுக்கு ஆதரவாக செயற்படுவதை பாகிஸ்தான் நிறுத்தவில்லை.

இந்த நிலையில், மும்பைத் தாக்குதலுக்கு மூளையாக செயற்பட்டவரும், லஷ்கர் இ தொய்பா அமைப்பின் தளபதியுமான சாகி உர் ரெஹ்மான் லக்வி உட்பட 1,800 பேரின் பெயர்களை பயங்கரவாதக் கண்காணிப்புப் பட்டியலில் இருந்து பாகிஸ்தான் அரசு சத்தமே இல்லாமல் நீக்கியுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளன.

அமெரிக்காவின் நியூயோர்க் நகரை தலைமையிடமாகக் கொண்டு இயங்கும் ஒழுங்கு முறை தொழில்நுட்ப நிறுவனமான காஸ்டெல்லம் ஏ.ஐ. என்ற நிறுவனம் இந்தத் தகவலை தெரிவித்துள்ளது.

கடந்த 2018ஆம் ஆண்டு பாகிஸ்தானின் பயங்கரவாத கண்காணிப்புப் பட்டியலில் சுமார் 7,600 பெயர்கள் இருந்ததாகவும், ஆனால் அது கடந்த 18 மாதங்களில் 3,800 இற்கு கீழ் குறைக்கப்பட்டுள்ளதாகவும் காஸ்டெல்லம் ஏ.ஐ. தனது அறிக்கையில் கூறியுள்ளது.

கடந்த மாத தொடக்கத்தில் இருந்து தற்போது வரை லஷ்கர் இ தொய்பா அமைப்பின் தளபதி சாகி உர் ரெஹ்மான் லக்வி உட்பட 1,800 பேரின் பெயர்கள் பட்டியலில் இருந்து நீக்கப்பட்டுள்ளதாக அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பாகிஸ்தானின் பயங்கரவாதக் கண்காணிப்பு பட்டியலில் இருந்து நீக்கப்பட்ட பல பெயர்கள் அமெரிக்கா மற்றும் ஐ.நா.சபையின் பொருளாதாரத் தடைப் பட்டியலில் உள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.

ஏற்கனவே, பயங்கரவாத அமைப்புகளுக்கு எதிராக பாகிஸ்தான் உறுதியான நடவடிக்கைகளை எடுக்கவில்லை எனக்கூறி சர்வதேச நிதி நடவடிக்கை பணிக்குழு (எப்.ஏ.டி.எப்) அந்த நாட்டை சாம்பல் பட்டியலில் வைத்துள்ளது.

பாகிஸ்தானை தொடர்ந்து சாம்பல் பட்டியலில் வைத்திருக்க வேண்டுமா? அல்லது நீக்க வேண்டுமா, என்பது குறித்து எப்.ஏ.டி.எப். வருகிற ஜூன் மாதம் முடிவு செய்ய உள்ள நிலையில், அந்த நாடு சுமார் 4 ஆயிரம் பயங்கரவாதிகளின் பெயரை கண்காணிப்பு பட்டியலில் இருந்து நீக்கியிருப்பது குறிப்பிடத்தக்கது. (ஜ-2)

## வாழ்வைப் பொன்னாக்கும் வைர வரிகள்

**"பேசாதே, செயற்படு" இதை உன் மனதில் குறித்துக் கொள். வார்த்தைகள் ஒருபோதும் தேவையில்லை. செயலே வாழ்வின் ஆதாரம். -ஸ்ரீ அன்னை**

## சத்திய தரிசனம்

### விடாமுயற்சி அவசியம்



❖ கிடைப்பதற்கு அரிய மனிதப் பிறவி எடுத்திருக்கிறோம். அதனால், நம் வாழ்வின் நோக்கம் கடவுளை அறிவதாக இருக்கட்டும்.

❖ நல்ல சிந்தனைகளை கேட்டால் மட்டும் போதாது. அதை அன்றன்றே நடைமுறைபடுத்த வேண்டும்.

❖ வாழ்வில் கஷ்ட நஷ்டங்களைத் தவிர்க்க முடியாது. அவற்றை மறந்து விடாமுயற்சியோடு உழைத்தால் பலன் நிச்சயம் கிடைக்கும்.

❖ தளராத நம்பிக்கை, மனத்தூய்மை, தொண்டு மனப்பான்மை இந்த மூன்றும் நம்மிடம் இருந்தால் தான் கடவுளின் அருளை நாம் பெற முடியும்.

❖ பொறாமை ஒரு நஞ்சு. மற்றவர்கள் மகிழ்ச்சியாக இருப்பதைக் கண்டு ஒருபோதும் பொறாமைப்படுவது கூடாது.

❖ அளவான பேச்சு, ஒருவரிடம் தெய்வ பலத்தை அதிகரிக்கச் செய்யும். சமூகத்தில் நன்மதிப்பை உண்டாக்கும். நினைவாற்றலை மேம்படுத்தும்.

❖ கடவுளின் திருநாமத்தை எப்போதும் மறவாது இருங்கள். நாள் முழுக்க நாமஜபத்தில் ஈடுபடுங்கள்.

# கிளர்ச்சியாளர்கள் மோதல் 20 பேர் பரிதாபமாகப் பலி



(டமாஸ்கஸ்)

சிரியாவில் செயற்பட்டு வரும் துருக்கி ஆதரவு கிளர்ச்சியாளர் குழுக்களுக்கு இடையே நடந்த மோதலில் 20 பேர் உயிரிழந்தனர்.

சிரியாவில் 2011ஆம் ஆண்டு முதல் நடைபெற்றுவரும் உள்நாட்டுப் போர் தற்போது முக்கிய கட்டத்தை எட்டியுள்ளது.

கிளர்ச்சியாளர்கள் கட்டுப்பாட்டில் இருக்கும் மிகவும் முக்கிய இடமான இட்லிப் மாகாணத்தை கைப்பற்ற அந்நாட்டு அரச படைகள் தீவிர முயற்சி மேற்கொண்டு வருகின்றன. கிளர்ச்சியாளர் குழுக்கள் மீது ரஷ்ய உதவியுடன் சிரிய இராணுவம் தாக்குதல் நடத்தி வருகிறது.

ஆனால், கிளர்ச்சியாளர்களுக்கு ஆயுதம் உள்ளிட்ட உதவிகளை துருக்கி அளித்து வருகிறது. மேலும், தங்கள் நாட்டுப் படைகளை சிரியாவுக்குள் துருக்கி அரசு நிலை நிறுத்தியுள்ளது. இதனால் அங்கு தினமும் தாக்குதல் சம்பவங்கள் அரங்கேறி வருகின்றன.

இதற்கிடையில், துருக்கிப் படைகள் சிரியாவுக்குள் ஆக்கிரமித்துள்ள பகுதிகளில் ஹசஹா மாகாணமும் ஒன்றாகும். அந்த மாகாணத்தில் உள்ள குர்திஷ் மக்களை ஒழிக்கும் நடவடிக்கையில் துருக்கிப் படையினரும், அதன் ஆதரவு கிளர்ச்சியாளர்கள் குழுக்களும் ஈடுபட்டு வருகின்றன.

இந்நிலையில், ஹசஹா மாகாணம் ரஷ் அல் அன் நகரில் செயற்பட்டு வந்த துருக்கி ஆதரவு கிளர்ச்சியாளர்களின் இரண்டு குழுக்களுக்கு இடையே நேற்று முன்தினம் கருத்து வேறுபாடு காரணமாக திடீரென மோதல் வெடித்தது.

இதனால் இரு குழுக்களும் ஒருவரை ஒருவர் துப்பாக்கியால் சுட்டு போரில் ஈடுபட்டனர். இந்த மோதலில் துருக்கி ஆதரவு கிளர்ச்சியாளர்கள் 20 பேர் உயிரிழந்தனர். மேலும், பல கிளர்ச்சியாளர்கள் படுகாயமடைந்திருப்பதாக சிரிய அரசு தரப்பில் தெரிவிக்கப் பட்டுள்ளது. (ஜ-2)

# 'கொவிட்-19' பரவலைக் கட்டுப்படுத்த இலங்கைக்கு ஜப்பான் நிதியுதவி

(டோக்கியோ)

இலங்கையில் கொவிட்-19 தொற்றுப் பரவலைக் கட்டுப்படுத்துவதற்காக ஜப்பானிய அரசாங்கம், ஐக்கிய நாடுகள் சிறுவர் நிதியம், புலம்பெயர்வுக்கான சர்வதேச நிறுவனம் மற்றும் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் மற்றும் செம்பிறை சம்மேளனம் ஆகியவற்றினூடாக 1,212,500 அமெரிக்க டொலர்கள் (சுமார் 230 மில்லியன் ரூபாய்) தொகையை நிதி உதவியாக வழங்கியுள்ளது.

பிரதான இடர் தொடர்பாடல் தகவல்களை கட்டமைப்பதற்காகவும், அத்தியாவசிய சுகாதார மற்றும் தூய்மையாக்கல் தயாரிப்புகளின் விநியோகங்களினூடாக தொற்றுக்கள் பரவுவதை கட்டுப்படுத்தும் செயற்பாடுகளுக்கு உதவுதல், தனிமைப்படுத்தும் அலகுகளை மறுசீரமைப்பது மற்றும் சிறுவர்கள் கல்வி மற்றும் சிறுவர் பாதுகாப்பு சேவைகளை தடைகளின்றி முன்னெடுப்பதை உறுதி செய்வது போன்றவற்றுக்காக ஐக்கிய நாடுகள் சிறுவர் நிதியத்துக்கு 500,000 அமெரிக்க டொலர்கள் வழங்கப்பட்டுள்ளன.

புலம்பெயர் மக்களின் உள்ளக மற்றும் எல்லைப்பகுதி ஒழுங்கிணைப்பு மற்றும் அதனுடன் தொடர்புடைய தடைகளை இல்லாமல் செய்து, ஆதாரபூர்வமான தகவல்களைப் பெற்றுக் கொள்வதற்கான வசதியை ஏற்படுத்துவது, அவர் எதிர்நோக்கும் அழுத்தம், பாகுபாடு மற்றும் மொழிப் பிரச்சினைகளை இல்லாமல் செய்வது மற்றும் பிரவேசிப்புத் துறைப் பகுதிகளில் சுகாதாரம் மற்றும் எல்லைப் பாதுகாப்பு முன்னாயத்த செயற்பாடுகளுக்கு உதவிகளை பெற்றுக் கொடுப்பதற்காக புலம்பெயர்வுக்கான சர்வதேச நிறுவனத்துக்கு 422,500 அமெரிக்க டொலர்கள் வழங்கப்பட்டுள்ளன.

சமூகத்துக்கு சுகாதாரம் மற்றும் தூய்மை தொடர்பான தகவல்களை பகிர்ந்தளிப்பது, பாதிக்கப்பட்ட பகுதிகளைச் சேர்ந்த மக்களுக்கு உளச்சமூக உதவிகளைப் பெற்றுக் கொடுப்பது, முன்னிலை தன்னார்வ மற்றும் ஊழியர்கள் மற்றும் தனிமைப்படுத்தப்பட்டுள்ள நோயாளர்களுக்கு தினசரி அத்தியாவசிய பொருட்களைப் பெற்றுக் கொடுப்பதற்காக இலங்கை அரசாங்கத்தினால் முன்னெடுக்கப்படும் தடுப்பு, பரவலை கட்டுப்படுத்தும் செயற்பாடுகளுக்கு சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் மற்றும் செம்பிறை சம்மேளனம் ஊடாக 250,000 அமெரிக்க டொலர்கள் வழங்கப் பட்டுள்ளன. (ஜ-2)


# கொரோனாவுக்கு மருந்து கண்டுபிடிப்பதில் உலக நாடுகள் ஒன்றிணைந்து செயற்பட வேண்டும்

## ஐ.நா.தீர்மானம்

(ஜெனிவா)

கொரோனாவுக்கு மருந்து கண்டுபிடிப்பதில் உலக நாடுகள் ஒருங்கிணைந்து செயற்பட வேண்டும் என்று கோரி ஐ.நா.சபையில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டு உள்ளது.

மனித குலத்துக்கு பெரும் அச்சுறுத்தலை ஏற்படுத்தி இருக்கும் கொரோனா வைரஸை கட்டுப்படுத்த பல்வேறு நாடுகளும் போராடிக் கொண்டு இருக்கின்றன. இந்த நோய்கிருமியை ஒழிக்க மருந்து கண்டுபிடிக்கும் முயற்சியில் விஞ்ஞானிகள் மும்முரமாக ஈடுபட்டுள்ளனர்.



இந்த நிலையில், 193 நாடுகளை உறுப்பினர்களாகக் கொண்ட ஐக்கிய நாடுகள் சபையில், பெருந்தொற்று நோயான கொரோனாவால் இதற்கு முன் எப்போதும் இல்லாத பாதிப்பு உலக நாடுகளுக்கு ஏற்பட்டு இருப்பதாகவும் எனவே இந்த நோய்க்கிருமியை கட்டுப்படுத்த சர்வதேச அளவிலான ஒத்துழைப்பு அவசியம் என்பதை வலியுறுத்தி கடந்த 2 ஆம் திகதி தீர்மானம் கொண்டு வந்து நிறைவேற்றப் பட்டது.

கொரோனா பாதிப்பு நிலவும் இந்த சூழ்நிலையில் வர்த்தகப் போரை கைவிட கோரியும், தன்னிச்சையான பொருளாதாரத் தடைக்கு எதிராகவும் ரஷ்யா கொண்டு வந்த தீர்மானம் தோல்வி அடைந்தது.

இந்த நிலையில், கொரோனாவைக் கட்டுப்படுத்த புதிய மருந்து கண்டுபிடிப்பது, புதிய மருத்துவ உபகரணங்களைத் தயாரிப்பது, மருத்துவ பரிசோதனை, மருந்துப் பொருட்கள் கொடுத்து உதவுவது மற்றும் சர்வதேச அளவில் பொருளாதாரத்தை மேம்படுத்துவது ஆகியவற்றில் உலக நாடுகள் ஒருங்கிணைந்து செயற்பட வேண்டும் என்பதை வலியுறுத்தி மெக்சிக்கோவின் சார்பில் வரைவு தீர்மானம் ஒன்று கொண்டு வரப்பட்டது.

இந்த விடயத்தில் ஐ.நா. பொதுச் செயலாளர் அன்டோனியோ குட்டேரஸ் உலக சுகாதார அமைப்புடன் இணைந்து செயற்பட வேண்டும் என்றும் அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஜ-2)

# உணவுத் தட்டுப்பாடு இரட்டிப்பாகும்

## உலக உணவு திட்ட அமைப்பு எச்சரிக்கை

(ஜெனிவா)

கொரோனா வைரஸ் தாக்கத்தை அடுத்து ஏற்பட்டுள்ள பொருளாதார வீழ்ச்சி காரணமாக உணவுத் தட்டுப்பாடு இரட்டிப்பாகும் என ஐக்கிய நாடுகள் சபையின் உலக உணவுத் திட்ட அமைப்பு தெரிவித்துள்ளது.

உணவுத் தட்டுப்பாட்டினை எதிர்கொள்ளும் மக்களின் எண்ணிக்கை இந்த ஆண்டு கிட்டத்தட்ட இரு மடங்காக அதிகரித்து 265 மில்லியனாக இருக்கும் என்றும் அந்த அமைப்பு சுட்டிக்காட்டியுள்ளது.

சுற்றுலாத்துறை வருமான வீழ்ச்சி, கொரோனா வைரஸ் தொற்று நோயுடன் தொடர்புடைய பிற கட்டுப்பாடுகள் ஆகியவற்றின் தாக்கம் இந்த ஆண்டு சுமார் 130 மில்லியன் மக்கள் கடுமையான பசியுடன் இருப்பார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

COVID-19 இனால் ஏற்கனவே மக்கள் பட்டினியை எதிர்நோக்கியுள்ளனர் என உலக உணவுத் திட்டத்தின் ஆராய்ச்சி, மதிப்பீடு மற்றும் கண்காணிப்பு பணிப்பாளர் ஆரிஃப் ஹுசைன் தெரிவித்தார். (ஜ-2)

# கிம் பூரண நலத்துடன் மீண்டு வரவேண்டும் ட்ரம்ப் வேண்டுதல்!



(வோஷிங்டன்)

வடகொரிய ஜனாதிபதி கிம் ஜாங் உன் நலமுடன் மீண்டு வரவேண்டும் என அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் தெரிவித்துள்ளார். இதுகுறித்து செய்தியாளர்களிடம் குறிப்பிட்ட அவர், கிம் ஜாங் உன் பற்றி வரும் செய்திகள் வருத்தமளிப்பதாகக் கூறியதுடன் கிம்முடன் தனக்கு நல்லதொரு உறவு இருந்ததாகக் கூறிய ட்ரம்ப், கிம் பூரண நலத்துடன் மீண்டு வரவேண்டும் எனத் தெரிவித்தார்.

இதேவேளை, கிம்மின் உடல்நலம் குறித்து நேரடியான தகவல்கள் ஏதும் வரவில்லை என்று கூறிய ட்ரம்ப், உளவுத் துறையின் அறிக்கையின் நம்பகத்தன்மை குறித்து தனக்குத் தெரியாது எனவும் தெரிவித்தார்.

கொரோனா அச்சுறுத்தல் காரணமாக உலக நாடுகளிடம் இருந்து வடகொரியா தன்னை தனிமைப்படுத்திக் கொண்டுள்ளது. இந்த நிலையில் கடந்த 15 ஆம் திகதி கிம்மின் தாத்தாவும் முக்கிய தலைவருமான கிம் இல் சுங்-இன் பிறந்தநாள் கொண்டாடப்பட்டது.

இந்த முக்கிய நிகழ்வில் வழக்கத்திற்கு மாறாக கிம் பங்கேற்காதது பல்வேறு சந்தேகங்களை எழுப்பியுள்ள நிலையில், அவருக்கு இருதய அறுவைச் சிகிச்சை செய்யப்பட்டுள்ளதாக செய்தி நிறுவனம் ஒன்று தெரிவித்துள்ளது.

மேலும், கிம்மின் உடல்நலம் குறித்த தகவல்கள் இரகசியமாக வைக்கப்பட்டுள்ள நிலையில், மிகவும் ஆபத்தான கட்டத்தில் அவர் உள்ளதாக அமெரிக்க உளவுத்துறை தகவல்கள் தெரிவித்துள்ளன. (ஜ-2)

## பொலனறுவை மாவட்டத்தில்

# ஒருவருக்கு கொரோனா தொற்று 12 கிராமங்கள் முற்றாக முடக்கம்

(பொலன்னறுவை)

இலங்கையில் கொரோனா தொற்றுக்குள்ளானவர்கள் அவ்வப்போது அடையாளம் காணப்படுவதால் எண்ணிக்கை அதிகரித்து வருகின்றது.

இந்நிலையில் தற்போது பொலன்னறுவையில் கொரோனா தொற்றாளர் ஒருவர் இனம் காணப்பட்டுள்ளார். இதையடுத்து பொலன்னறுவை லங்காபுர பகுதியிலுள்ள 12 கிராமங்கள் முழுமையாக தனிமைப்படுத் தப்பட்டுள்ளது. இவ்வாறு தனிமைப்படுத்தப்பட்ட பகுதிகளில் இருந்து யாரும் வெளியேறவோ, இப்பகுதிக்குள் யாரும் உட்புகவோ முடியாமல் பொலிஸ் பாதுகாப்பு கொடுக்கப்பட்டுள்ளது.

பொலனறுவை பகுதியில் நேற்று அடையாளம் காணப்பட்ட கொரோனா வைரஸ் நோயாளர் வெலிசறை கடற்படை முகாமில் கடமையாற்றிய சிப்பாய் என உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. (ம-3)

## வடமராட்சியில்...

கடற்படையினர் தெரிவித்தனர்.

நேற்று புதன்கிழமை காலை வடமராட்சி கிழக்கின் பூனைத் தொடுவாய் கடற்பகுதியூடாக கஞ்சா கடத்தப்படுவதாக கடற்படையினருக்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலையடுத்து அங்கு சென்ற கடற்படையினர் இலங்கைக்கு கடத்த முற்பட்ட 93 கிலோக்கிராம் கேரளக் கஞ்சாவை மீட்டதுடன் சந்தேகத்தில் மருதங்கேணி, வத்தராயன் பகுதிகளைச் சேர்ந்த இருவரை கைது செய்யதனர். (ம-3.60)

## வெளிமாவட்...

அவர் இதனைத் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது.

கொரோனா வைரஸ் தொற்று காரணமாக ஊரடங்குச் சட்டம் அமுல்படுத்துவதற்கு முன்னர் வேறு மாவட்டங்களில் இருந்து யாழ்ப்பாணத்துக்கு வந்தவர்கள் மீண்டும் செல்வதற்கான போக்குவரத்து ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது.

வேறு மாவட்டங்களில் இருந்து யாழ்ப்பாணத்திற்கு வந்து தங்கியிருப்போர் கிராம சேவகரின் உறுதிப்படுத்தலுடன் பிரதேச செயலாளருடன் சுகாதார பிரிவினரும் உறுதிப்படுத்திய பின்னர் அது தொடர்பான கடிதத்தை யாழ் மாவட்ட செயலகத்திடம் ஒப்படைக்கவேண்டும் அதனை நாம் அந்தந்த மாவட்ட செயலாளர்களுக்கு அனுப்பி வைப்போம் என்று தெரிவித்தார்.

மேலும், ஊரடங்குச் சட்டம் அமுல்படுத்தப்பட்ட மாவட்டங்களைத் தவிர ஏனைய மாவட்டங்களுக்கு செல்வதற்கும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

அத்தியாவசியமாக செல்வோர் மட்டும் செல்லவேண்டும் எனவும் அநாவசியமான பயணங்களைத் தவிர்த்துக்கொள்ளுமாறும் தெரிவித்துள்ளதுடன் பதியப்படாது களவாக மாவட்டங்களுக்கு உள்வருவதைத் தவிர்த்துக்கொள்ளுமாறும் அவர் கோட்டுக்கொண்டுள்ளார். (ம-3.9)

## அரசியலமைப்பு...

மையில் இந்த கூட்டம் நடைபெறவுள்ளது.

சபாநாயகரின் உத்தியோக பூர்வ இல்லத்தில் அரசியலமைப்பு பேரவை கூடவுள்ளது.

பிரதமர் மகிந்த ராஜபக்ஷ, எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச உள்ளிட்ட அரசியலமைப்பு பேரவையின் உறுப்பினர்கள் இந்த கூட்டத்தில் கலந்துகொள்ளவுள்ளனர். (ம-3)

## வேகக்கட்டுப்...

பகுதியில் நேற்று நண்பகல் இடம்பெற்றுள்ளது.

இதில் அதே இடத்தினை சேர்ந்த சுந்தரம் மகேந்திரம் (வயது 45) என்பவரே உயிரிழந்தவராவார்.

இது தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (ம-3)

## கொரோனா கட்டுப்பட்டுள்ளது...

கொரோனா வைரஸ் தொற்று இந்நாட்டு மக்கள் மத்தியில் பரவும் ஓர் நிலைமை கிடையாது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

எனவே நாளையே நாட்டை வழமை நிலைக்குக் கொண்டு வர முடியும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

தனிமைப்படுத்தப்படும் மத்திய நிலையங்களிலேயே தற்பொழுது நோயாளிகள் கண்டறியப்படுகின்றனர் என அவர் தெரிவித்துள்ளார். நாட்டின் பொருளாதார நிலைமையைக் கருத்திற் கொண்டு தற்போதைய தளர்வுகள் ஏற்படுத்தப்பட்டுள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார்.

வளர்ச்சியடைந்த நாடுகள் வைரஸ் தொற்று பரவுவதனை கட்டுப்படுத்த முடியாது திண்டாடும் நிலையில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்சவின் தலைமையில் இந்த நிலைமை வெற்றிகரமாக கட்டுப்படுத்தப்பட்டுள்ளது என அவர் தெரிவித்துள்ளார். (ம-3)

## நேற்று 20 பேருக்கு கொரோனா...

னறுவையிலிருந்து நேற்றையதினம் 20 பேருக்கு கொரோனா தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

அதற்கமைய, 213 நோயாளர்கள் வைத்தியசாலைகளில் தங்கியிருந்து சிகிச்சை பெறுகின்றனர்.

நாட்டில் கொரோனா தொற்றுக்குள்ளான 105 பேர் இதுவரையில் குணமடைந்துள்ளனர்.

இலங்கையில் கொரோனா தொற்றினால் இதுவரை 7 பேர் உயிரிழந்துள்ளனர். (ம-3)

## சிகை அலங்காரம் செய்த நபருக்கும்...

கள் பணிப்பாளர் அனில் ஜாசிங்க தெரிவித்துள்ளார்.

குறித்த நபர் 25 பேருக்கு சிகை அலங்காரம் செய்திருந்த நிலையில் குறித்த 25 பேருக்கும் கொரோனா வைரஸ் தொற்று பரவியிருக்கலாம் என மேலும் சந்தேகம் வெளியிபட்டுள்ளது.

எனவே அது குறித்து ஆராய்ந்து நடவடிக்கைகளை எடுக்க பாதுகாப்புத் தரப்பும் சுகாதார அமைச்சும் தயாராகியுள்ளன என்றும் குறிப்பிட்டுள்ளார்.

கொரோனா வைரஸ் தாக்கம் உறுதியான 310 பேர் இதுவரை நோயாளிகளாக அடையாளம் காணப்பட்டுள்ளதுடன் 104 பேர் இதுவரை குணமடைந்து வெளியேறியுள்ளனர்.

மேலும் கொரோனா வைரஸ் தாக்கம் உறுதியானவர்களில் 07 பேர் உயிரிழந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-3)

## 6 இலட்சம் பேர் வசிக்கும் யாழ்ப்...

சந்திப்பின்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் குறிப்பிடுகையில், யாழ்ப்பாணத்தில் சமூகத் தொற்று ஏற்படவில்லை எனவும் வெளிநாட்டிலிருந்து வந்த மதபோதகரினாலேயே குறித்த கொரோனா தொற்று ஏற்பட்டதாகவும் கொரோனா தொடர்பாக பொதுமக்கள் அச்சமடையத் தேவையில்லை எனவும் வடக்கு சுகாதார அதிகாரிகளினால் தெரிவிக்கப்படுகின்றது.

எனினும் இந்தக் கருத்தினை முழுமையாக ஏற்றுக்கொள்ள முடியாது. உதாரணமாக நான் ஒன்றைக் கூற விரும்புகிறேன். கடந்த வாரம் கொழும்பில் இடம்பெற்ற சம்பவங்கள் நமக்கு ஒரு படிப்பினையாக உள்ளன.

கொழும்பில் கடந்த இரு தினங்களாக ஏற்பட்டுள்ள தொற்றுகள் அனைத்தும் நோய் அறிகுறி இல்லாது ஏற்பட்ட தொற்றாகவே நாம் பார்க்கின்றோம். எனினும் யாழ்ப்பாணத்தைப் பொறுத்தவரைக்கும் இன்றுவரை 360 பேர் வரை கொரோனா பரிசோதனையை மேற்கொண்டுள்ளோம்.

இந்தப் பரிசோதனையானது மூன்று, நான்கு மடங்காக அதிகரிக்கப்படும் வரை யாரும் யாழ்ப்பாணத்தில் சமூகத்தொற்று இன்னும் ஏற்படவில்லை என்பதைக் கூறமுடியாது. எனவே நாங்கள் வடக்கிலுள்ள சுகாதாரத் திணைக்களத்தினரிடம் கோரிக்கை முன்வைக்க விரும்புகின்றோம்.

யாழ்ப்பாணத்திற்கு வெளிநாட்டில் இருந்து வந்த மதபோதகருடன் தொடர்புபட்ட நபர்களுக்கே கொரோனா பரிசோதனையை இன்றுவரை மேற்கொண்டுள்ளோம். ஒரு தடவை அல்லது இரண்டு தடவைகள் பரிசோதனையை மேற்கொண்டுவிட்டு நாம் சமூகத்தொற்று இல்லை என்று கூறிவிட முடியாது.

எனினும் யாழ்ப்பாணத்தைப் பொறுத்தவரைக்கும் வெளிநாட்டில் இருந்து வருகை தந்துள்ளவர்கள் நிறையவே உள்ளார்கள். அவர்கள் தொடர்பாக நாம் அதிக அக்கறை செலுத்த வேண்டியதாக உள்ளது. எனவே வடக்கில் கொரோனா பரிசோதனையை இரண்டு, மூன்று மடங்காக அதிகரித்து அந்த பரிசோதனை முடிவின் பின்னரே நாம் சமூகத்தொற்று உள்ளதா, இல்லையா என்பதைப் பரிசீலிக்க முடியும் என அவர் தெரிவித்தார். (ம-3)

## கோவிட் 19 சுகாதார

# சமூக பாதுகாப்பு நிதி 822 மில்லியனாக அதிகரிப்பு

(கொழும்பு)

நிறுவன மற்றும் தனிப்பட்ட அன்பளிப்புகள் மற்றும் நேரடி வைப்புகளுடன் கொவிட் 19 சுகாதார, சமூக பாதுகாப்பு நிதியத்தின் மீதி தற்போது 822 மில்லியனாக அதிகரித்துள்ளது.

சிங்கப்பூர் தலைமை சங்கநாயக்க தேரர் சங்கைக்குரிய பெல்லன்வில தம்மரத்ன தேரர் 5 மில்லியன் ரூபாயும், மஹரகம சாசன சேவை சங்கம் மற்றும் வொஷிங்டன் பௌத்த விகாரைகளின் 5 மில்லியன் ரூபாய், வட அமெரிக்காவின் தலைமை சங்கநாயக்க தேரர் சங்கைக்குரிய மகரகம தம்மசிறி தேரர், பிரான்ஸ் தலைமை சங்கநாயக்க தேரர் சங்கைக்குரிய பரவாஹெர சந்திரரத்ன தேரர் அன்பளிப்பு செய்த ஒரு மில்லியன் ரூபாய், அதன் செயலாளர் மகிந்த மடிஹஹேவா, சுவிட்சர்லாந்தில் உள்ள ஜெனீவா சர்வதேச பௌத்த விகாராதிபதி கலாநிதி தவளம தம்மிக தேரர் மற்றும் விகாராதிபதி ஹல்விடிகல சுஜாத தேரர் ஆகியோர் ஒரு மில்லியன் ரூபாய், கல்கிஸ்ஸ பௌத்த நிறு வனத்தின் தலைவர் கலாநிதி திவியாகஹ யஸஸ்ஸி தேரர் ஒரு மில்லியன் ரூபாய், இத்தாலி சிரன்சில் உள்ள சமாதி விகாராதிபதி தொம்பதெனிய நந்தசிறி தேரர் 2 லடசம் ரூபாயும் சமூக பாதுகாப்பு நிதியத்திற்கு அன்பளிப்பு செய்யப்பட்டுள்ளது. ரூபாவும் நிதியத்திற்கு அன்பளிப்பு செய்யப்பட்டது. (ம-3)

## வடக்கில் தனிமைப் படுத்தலுக்காக...

இலங்கையர்கள் உட்பட சுமார் ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் அழைத்துவரப்பட்டுள்ளனர். மேலும் பலர் அழைத்துவரப்படவுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

கொழும்பில் பல பகுதிகளில் கொரோனா வைரஸ் தொற்று பரவலடைந்து வருவதால் அந்தந்த பகுதிகள் முடக்கப்பட்டு தனிமைப்படுத்தப்பட்டுள்ளன.

அதில் தொற்று இனங்காணப்பட்டவர்களுடன் தொடர்புடையவர்கள் வெளிமாவட்டங்களுக்கு தனிமைப் படுத் தலுக் காககொண்டு செல்லப்படுகின்றனர் அந்த வகையில் யாழ்.மாவட்டத்தில் பலாலி தனிமைப்படுத்தல் முகாமுக்கு 99 பேரும், கொடிகாமம் தனிமைப்படுத்தல் முகாமுக்கு 360 பேரும், கிளிநொச்சி மாவட்டத்தில் இயக்கச்சி படை முகாமுக்கு 240 பேரும், இரணைமடு முகாமுக்கு 170 பேரும், முல்லைத்தீவு மாவட்டத்தில் கேப்பாபிலவு கடற்படை முகாமுக்கு 259 பேரும் நேற்று பகல் அழைத்துவரப்பட்டுள்ளனர்.

மேலும் 124 பேர் முல்லைத்தீவு முகாம்களுக்கும் அழைத்து வரப்பட்டுள்ளனர்.

இன்று அல்லது நாளை வவுனியா பம்பை மடுவிலுள்ள தனிமைப்படுத்தல் நிலையத்துக்கும் மக்கள் அழைத்துவரப்படவுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

கொழும்பில் கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளானவர்கள் அண்மைக்காலமாக அதிகளவில் இனங்காணப்பட்டு வரும் நிலையில், அந்தந்த அபாய வலயங்களில் உள்ள மக்கள் தனிமைப்படுத்தலுக்காக வடக்குக்கு அழைத்துவரப்பட்டுள்ளனர்.

வடக்கில் யாழ் மாவட்டம் தவிர்ந்த ஏனைய மாவட்டங்களில் கொரோனா தொற்று இனங்காணப்படாத நிலையில் இவ்வாறு அபாய வலயங்களில் இருந்து மக்களை வடக்குக்கு அழைத்து வந்தமை வடக்கு மக்கள் மத்தியில் அச்சத்தை ஏற்படுத்தியுள்ளது. (ம-3,9,101)

## யாழ்ப்பாணத்துக்கு பாரவூர்தி மூலம்...

யாழ் மாவட்டத்தில் நேற்று புதன்கிழமை இரவு நடத்திய அவசர ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

நாட்டில் கொரோனா அச்சுறுத்தல் அதிகமாகக் காணப்படும் கொழும்பு மாவட்டத்தின் அபாய வலயங்களில் தங்கியிருந்த இவர்கள் 8 பேரும் யாழ்ப்பாணம் குருநகர், பாசையூர், நாவற்குழி, தெல்லிப்பழை, ஐந்து சந்தி, தொல்புரம் மற்றும் சங்கானையைச் சேர்ந்தவர்கள். அவர்களின் விவரங்கள் பாதுகாப்புத் தரப்பினரிடம் வழங்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் ஒரு மாதகாலம் ஊரடங்குச் சட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டு கொரோனா அச்சுறுத்தலிலிருந்து மீள்வதற்கு அனைவரும் வழங்கிய தியாகம் இந்த நபர்களால் உதாசீனம் செய்யப்பட்டுள்ளது. அவர்கள் அடையாளம் காணப்பட்டால் தனிமைப்படுத்தல்நிலையத்தில் நிறுவன தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்படுவார்கள்.

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும் உண்மையைக் கூறி உரிய வகையில் இங்கு வருகை தந்திருக்க முடியும். அவர்களால் சொந்தக் குடும்பத்தினருக்கும் அயலவர்களுக்கும் சமூகத்துக்கும் அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது.

எனவே சம்பந்தப்பட்ட நபர்களுக்கு எதிராக எதிர்காலத்தில் தண்டனைக்குரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்றார்.

மேலும் நேற்று இரவு பாரவூர்தி உட்பட எட்டு பேரும் கைது செய்யப்பட்டு தனிமைப்படுத்தல் முகாமுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக இராணுவ தரப்பு தெரிவித்துள்ளது. (ம-3,9.101)

## வீடுகள், ஆலயங்கள் சேதம்...

யாழ் மறவன் புலத்தில் ஏற்பட்ட மினி சூறாவளியால் வீடுகள், ஆலயங்கள், பொது மண்டபங்கள் சேதமடைந்துள்ளன.

மறவன்புலவு கிழக்கு மணற்காடு கந்தசுவாமி ஆலயத்தை அண்டிய பகுதிகளிலேயே நேற்று பிற்பகல் 3 மணியளவில் மினி சூறாவளி தாக்கம் ஏற்பட்டுள்ளது.

இந்த மினி சூறாவளி தாக்கத்தால் ஐந்து வீடுகள் சேதமடைந்துள்ளன.

அத்துடன் மணற்காட்டு கந்தசுவாமி ஆலயம், ஒளி சுட்டான் ஞானவைரவர் ஆலயம் மறவன் புலவு பொது நோக்கு மண்டபம் உள்ளிட்டவை முற்றாக சேதமடைந்துள்ளன.

இந்த மினி சூறாவளியால் வீட்டின் கூரைகள் தூக்கி வீசப்பட்டதுடன் கோழிக் கூடுகள், மாட்டுக் கொட்டில்கள், சுற்றுமதில்கள் உள்ளிட்டவையும் சேதம் அடைந்துள்ளது. (ம-3)

# நாடளாவிய ரீதியில் ஊரடங்கை மீறிய 35 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் கைது

## 9 ஆயிரம் வாகனங்களும் பறிமுதல்

(கொழும்பு)

ஊரடங்குச் சட்டத்திற்கு புறம்பாக செயற்பட்டதாக 35 ஆயிரத்து 321 பேர் கைது செய்யப்பட்டுள்ளதுடன், அவர்களிடமிருந்து 9 ஆயிரத்து 15 வாகனங்கள் கைப்பற்றப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பொலிஸ் அத்தியட்சகர் ஜாலிய சேனாரத்ன தெரிவித்தார்.

கோவிட் - 19 வைரஸ் பரவலை கட்டுப்படுத்துவதற்காக அமுல்படுத்தப்பட்ட பொலிஸ் ஊரடங்குச் சட்டம் கொழும்பு, கம்பஹா, களுத்துறை, புத்தளம், வரக்காபொல, அலவத்துகொட மற்றும் அக்கரைப்பற்று ஆகிய பொலிஸ் பிரிவுகளில் தொடர்ந்தும் அமுல்படுத்தப்பட்டுள்ளதுடன், ஏனைய பகுதிகளுக்கு தளர்த்தப்பட்டுள்ளது.

இவ்வாறு தளர்த்தப்பட்டுள்ள ஊரடங்கு தொடர்ந்தும் இரவு எட்டு மணிமுதல் காலை 5 மணிவரை அமுல்படுத்தப்பட்டு வருகின்றது. மக்கள் தங்களது அத்தியாவசிய தேவைகளை நிறைவேற்றிக் கொள்ளவும், அரச நிறுவனங்களின் செயற்பாடுகளை முன்னெடுக்கவுமே இந்த ஊரடங்கு தளர்த்தப்பட்டுள்ளது. இந்த காலப்பகுதியில் அத்தியாவசிய தேவை இன்றி முறையற்று செயற்படுவதை தவிர்த்துக் கொள்வதுடன், இந்தக் காலப்பகுதியில் விநோத பயணங்கள், உற்சவங்கள், விநோத நிகழ்வுகள் மற்றும் யாத்திரைகள் ஆகியவற்றில் கலந்து கொள்வதையும் தவிர்த்துக் கொள்ள வேண்டும்.

இதேவேளை இந்தக் காலப்பகுதியில் உற்பத்தி செயற்பாடுகளை முன்னெடுக்கவும் செயற்படுத்த முடியும்.

அதற்கமைய நேற்று புதன்கிழமை வரையிலான 24 மணித்தியாலயத்திற்குள் மாத்திரம் 588 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். அவர்களிடமிருந்து 132 வாகனங்களும் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன.

அதற்கமைய ஊரடங்குச் சட்டத்திற்கு புறம்பாக செயற்பட்டதாக இதுவரையில் 35 ஆயிரத்து 321 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். இவர்களிடமிருந்து 9 ஆயிரத்து 15 வாகனங்கள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன. (ம-3)

### கொரோனாவால் புலம்பெயர் தேசங்களில்

# தமிழ் உறவுகளின் மரணங்கள் எமது தேசத்துக்கு பேரிழப்பு

### முன்னாள் எம்.பி சிறீதரன் கவலை

(கொடிகாமம்)

கொடிய கொரோனா வைரஸ் தொற்று காரணமாக புலம்பெயர் தேசங்களில் ஏற்பட்டுள்ள ஈழத் தமிழ் உறவுகளின் மரணங்கள் எமது தேசத்திற்கு பேரிழப்பு என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் கவலை வெளியிட்டுள்ளார்.

அத்துடன் கொரோனா தொற்று காரணமாக இதுவரையில் முப்பது பேருக்கும் மேற்பட்டவர்கள் உயிரிழந்திருக்கின்றமை பற்றிய துயரச் செய்திகள் கிடைத்திருப்பதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

புலம்பெயர் தேசத்தில் ஏற்பட்டுள்ள இந்த மரணங்கள் தொடர்பில் அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது.

'தாய் மண்ணுக்காகவும் மக்களுக்காகவும் தமது சொந்தங்களுக்காகவும் அல்லும் பகலும் பா்டுபட்ட எமது உறவுகளின் இழப்புக்கள் இங்கே உள்ள பல வீடுகளை கண்ணீரில் நனைத்துள்ளது. குழந்தைகள் முதல் முதியவர்கள் மாத்திரமின்றி ஊடகவியலாளர் மருத்துவர் என்று பல புலமையாளர்களையும் இழந்திருக்கின்றோம் இந்த இழப்பு எமக்கு பெரும் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது.

இலங்கை அரசின் அச்சுறுத்தல்களால் நாட்டை விட்டு புலம்பெயர்ந்து அகதிகளாக அந்த மக்கள் பட்ட துன்பங்கள் சொல்லி மாளாதவை. கூடு திரும்ப முடியாத பறவைகளாய் உலகம் எங்கும் அலையும் எமது மக்கள் தாய் மண்ணுக்காக் பனியிலும் குளிரிலும் உழைக்கின்றனர்.

அத்துடன் எமது தேச விடுதலைப் போராட்டத்திற்கும் பெரும் பங்களிப்பை புலம்பெயர்ந்த உறவுகள் வழங்கியிருக்கிறார்கள். அது மாத்திரமின்றி இன்றைக்கு போரால் சிதைந்துபோன வடக்கு கிழக்கை மீட்டெடுப்பதில் புலம்பெயர் உறவுகளின் பங்களிப்பு அளப்பெரியது.

இந்த நிலையில் புலம்பெயர்ந்த தேசங்களில் இருந்து வரும் மரணச் செய்திகள் எம்மை பெரும் சோகத்தில் ஆழ்த்தியுள்ளது.

அங்குள்ள எமது உறவுகள் இந்த நெருக்கடிக் காலத்திலும் தமது உடல் நலன்களைப் பாராமல் உழைப்பதும் இந்த நோயால் பாதிக்கப்பட காரணம் என்று அங்குள்ள சில மருத்துவர்கள் கூறுகின்றார்கள்.

சுவர் இருந்தால்தான் சித்திரம் வரைய முடியும் என்பதற்கு ஏற்ப இந்த நெருக்கடிக் காலத்தில் உங்களை பாதுகாத்து உங்கள் நலனில் அக்கறை கொள்ளுமாறு எங்கள் அன்புமிகுந்த உறவுகளை வேண்டி நிற்கிறோம்.

ஏற்கெனவே இன அழிப்பு போரால் லட்சம் உறவுகளை இழந்த நாம் இனியும் அநியாயமாக ஒரு உயிரையும் இழக்கக் கூடாது.

அத்துடன் கொரோனா என்ற கொடிய நோயினால் நிலத்திலும் புலத்திலும் காவு கொள்ளப்பட்ட எமது உறவுகளுக்கு எமது அஞ்சலியை தெரிவிப்பதுடன் அவர்களின் குடும்பத்தினருக்கு எமது ஆறுதலையும் பகிர்ந்து கொள்கிறேன்'

அதேவேளை இத்தாக்கத்திற்கு உட்பட்டிருக்கின்ற எல்லா நாடுகளும் தாக்கத்தில் இருந்து மீட்சி பெறவும் நோயினை வெற்றி கொள்வதற்கான திடகாத்திரத்தினை அந்நாடுகளின் தலைவர்கள் பெற்றுக் கொள்ளவும் தொற்றுக்கு உள்ளாகியோர் குணமடைந்து சுபீட்சமும் சௌக்கியமும் மிக்க வகையில் உலக நாடுகள் அனைத்தும் மீண்டெழவேணடும் என எல்லாம் வல்ல இறைவனை பிரார்த்திப்போமாக

இவ்வாறு அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.(ம-3,114)


**வீடு வாடகைக்கு உண்டு**

K.K.S வீதி, யாழ்ப்பாணத்தில்
(யாழ்.இந்துக்
கல்லூரிக்கு அருகில்)
சராசரிக் குடும்பம் வசிக்கக்கூடிய
வீடு வாடகைக்கு உண்டு.

தொடர்பு: (C-9527)
077 392 6736

**Ratnam Biriyani Centre**

Feel the real DUM taste



Chicken Dum Biriyani 580/= 520/=
Free Home Delivery
075 778 9871
10 % DISCOUNTED (2659)


# வாய்த்தர்க்கம் கைகலப்பாக மாறியதில் இளைஞன் படுகாயம்

## கொடிகாமத்தில் சம்பவம்

மது போதையில் தாக்கியதில் இளைஞர் ஒருவர் காயமடைந்த நிலையில் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இந்த சம்பவம் நேற்று மாலை 6.00 மணிக்கு கொடிகாமம் நாகநாதன் வீதியில் இடம்பெற்றுள்ளது.

ஊரடங்கு தளர்த்தப்பட்ட நேரத்தில் இளைஞர்கள் சிலர் சேர்ந்து மது அருந்தும் போது ஏற்பட்ட வாய்த்தர்க்கம் கைகலப்பாக மாறியதில் இளைஞர் ஒருவர் காயமடைந்தார் எனத் தெரிவிக்கப்பட்டது.

கச்சாய் வீதி கொடிகாமத்தை சேர்ந்த 21 வயதுடைய இளைஞர் ஒருவரே காயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (ம-3,114)

# வவுனியாவில் காற்றுடன் கூடிய மழையால் பாரிய சேதம்

வவுனியா நகரப் பகுதியில் காற்றுடன் கூடிய மழை பொழிந்தது. இதன் காரணத்தினால் வவுனியா குடியிருப்பு பூங்காவில் மரம முறிந்து மின்சார வயரில் விழுந்துள்ளது.

இதேவேளை ஏ9 சாலை தாண்டிக்குளம் பகுதியில் வாகனம் பழுதுபார்க்கும் இடத்தில் தரித்திருந்த கனரக வாகனத்தின் மீது பாரிய மரம் முறிந்து வாகனம் சேதமடைந்த அதே வேளை மின்சார இணைப்பு வயரும் அறுந்து சேதமடைந்துள்ளது.

இந்நிலையில் வவுனியா ஈச்சங்குளம், சுந்தரபுரம் போன்ற கிராமங்களில் விவசாயிகளின் தோட்டப் பயிர்கள் சேதமடைந்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (ம-3,299)


**Yarl Geek Challenge**
**Season 9 - (ஜூனியர்) போட்டிகள்**

Yarl IT Hub இனால் வடமாகாணக் கல்வித் திணைக்களத்துடன் இணைந்து வடக்கு மாகாணத்தில் உள்ள பாடசாலை மாணவர்கள் மத்தியில் புத்தாக்கத்திறனை விருத்திசெய்யும் முகமாக வருடாந்தம் நடாத்தப்படும் Yarl Geek Challenge (ஜூனியர்) போட்டியானது ஒன்பதாவது தடவையாகவும் இடம்பெறவுள்ளது. இவ்வருடம் போட்டி இணையவழி மூலம் நடாத்தப்படவுள்ளது.

நீங்கள் பிரச்சனைகளுக்கு புத்தாக்க தயாரிப்பு ஒன்றின் மூலம் தீர்வு காணும் ஆர்வமுள்ளவரா அல்லது விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப பரிசோதனைகளை வீட்டிலே செய்துபார்க்கும் ஆர்வமுள்ளவரா அல்லது கலை ஆக்கங்களில் ஆர்வமுள்ளவரா அப்படியாயின் இது உங்களுக்கான போட்டி. நீங்களும் விண்ணப்பியுங்கள் ஆர்வமுள்ள மாணவர்களுக்கு தெரியப்படுத்தி விண்ணப்பிக்க ஊக்கப்படுத்துங்கள்.

இம்முறை போட்டி Web application, Mobile application, Hardware application, Application of Science, Other Innovations ஆகிய ஐந்து பிரிவுகளில் இடம்பெறவிருக்கின்றன.

விண்ணப்ப இறுதித் திகதி – ஏப்ரல் 30 2020
விண்ணப்பப்படிவம் – https://tinyurl.com/ygc9-junior

மேலதிக விபரங்களுக்கு
www.yarlithub.org/ygc
event@yarlithub.org
www.fb.com/yarlithub
0767673158


இப்பத்திரிகை வலம்புரி அன்சோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 23.04.2020 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.